
செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௮ பங்குனி (Apr.'77) [பரல்-௮

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உறுப்பினர் கட்டணக் குறிப்பு:

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு 12 00 வெளிநாடு 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

14-4-77

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருக	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௮, பங்குனி ஏப்ரல் 1977	பரல் அ

நூற்பதிப்புத் துறைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

(முன் எ ஆம் பரல் ௩௧௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் தமிழ்நாட்டில் மட்டுமன்றிக் கேரளம், கருநாடகம், ஆந்திரம், மகாராட்டிரம், வங்காளம் முதலிய இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங்களிலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, பீசி, தென்னாப்பிரிக்கா முதலிய பிற நாடுகளிலும் கணிசமான அளவில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், ஆசிரியப் பயிறசிக் கல்லூரிகள், தொழிற்கல்விப் பயிற்சி நிலையங்கள் ஆகியவை ஆண்டுதோறும் வளர்ந்து வருகின்றன. பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் சிற்சில பள்ளி கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் பயிற்றுவிக்கப் பெறுகின்றது; தமிழ்த்துறை இயங்கி வருகின்றது.

தமிழ்நாட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொது நூல் நிலையங்கள் உள்ளன. அன்றியுந் திருக்கோயில்கள், திருமடங்கள் சிலவற்றின் சார்பிலும், கூட்டுறவுத் துறையின் சார்பிலும் பற்பல நூல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. தனியார் நடத்தும் நூல் நிலையங்களும் சில உள. மற்றும் உள்நாடு வெளிநாடுகளில் தமிழ் வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சிப் பணிபுரியும் பொதுப் பணி மன்றங்கள் பலவும் படிப்பகங்கள் நடத்திவருகின்றன.

இவற்றையெல்லாம் நோக்கும்போது தமிழ் நூல்கள் நூறுயிரக்கணக்கில் அச்சிடப்பட்டுப் பரவுதற்கு வாய்ப்புள்ளதுபோல்

தோன்றும். ஆனால் இலக்கணம், இலக்கியம், கலை, வரலாறு முதலியனவான தகுதி வாய்ந்த தமிழ்நூல்கள் ஓராயிரம் அல்லது ஈராயிரம் படிகள் பதிப்பிக்கப்பட்டாலும் அவை விற்பனையாவதற்குக் குறைந்தது ஐந்தாண்டுக் காலம் பிடிக்கின்றது.

இவ் வகையில் மேலும் சில கருத்துகளை ஈண்டுச் சுட்டிக் காட்டுவது இன்றியமையாதது என்று எண்ணுகின்றேன். பாடநூல்களை அரசினர் வெளியிடுதற்கு முன்னர், அரசுத் தேர்விற்கு வைக்கப்படும் பாடநூல்கட்கு மட்டுமே சிற்சிலரால் வினுவிடை நூல்கள் (Notes) வெளியிடப்பட்டன. அரசு பாட நூற் பதிப்பு நிறுவனம் ஒன்றைத் துவங்கிப் பள்ளிப் பாட நூல்கள் அனைத்தையும் வெளியிடத் தொடங்கிய காலந்தொட்டு இரண்டாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்பு முடிய எல்லா வகுப்புப் பாடநூல்கட்கும் வினுவிடை நூல்கள் பற்பலரால் வெளியிடப்பட்டு வருகின்றன. சில செய்தித்தாள்களுங்கூடத் தொடர்ச்சியாகப் பாடநூல் வினுவிடைகளை வெளியிட்டு வருகின்றன. கல்லூரிப் பாடநூல்கட்கும் வினுவிடைகள் வெளிவருகின்றன. குறிப்பாகத் தமிழ்க் கல்லூரி மாணவர்கட்குங்கூட வினுவிடை நூல்கள் வெளியிடப்படுகின்றன.

எனவே, மாணவர்கள் மூல நூல்களைப் பயிலாது வினுவிடைகளைப் படித்தால் போதுமென்றும், அதுவும் தேர்வு நெருக்கத்தில் படித்தால் போதுமென்றும் எண்ணி, மூலநூற் பயிற்சியைப் புறக்கணித்து விடுகின்றனர். ஆசிரியர்களிற் பெரும்பாலரும் இவ் வினுவிடை நூல்களையே சொல்லிக் கொடுக்கின்றனர்; படிக்கத் தூண்டுகின்றனர்; அவற்றைக் கொண்டே தேர்வுக்குரிய வினுக்களையும் அமைக்கின்றனர். ஆகவே மாணவர்கள் மூலநூல்களைச் சுவையுணர்ந்து ஆய்ந்து பயிலும் பழக்கத்தை மேற்கொண்டிலர். மாணவர்களின் இயற்கையான அறிவு முறையாக வளரவும், தனித்திறம் வெளிப்படவும் வாய்ப்பில்லை. அன்றியும் ஆசிரியர்கட்கு மாணவர்கள்பால் அக்கறையும், மாணவர்கட்கு ஆசிரியர்கள்பால் பணிவொடு கூடிய நல்லன்பும் சிறப்புற வளராது, இருசாராரும் தவறுதற்கு வாய்ப்பாகின்றது. மாணவர்களின் கல்வித்தரம் குறைபடுதற்கு இவ் வினுவிடைக் குறிப்பு நூல்கள் பெருங் காரணமாம் என்பது அறிதற்பாலது.

மேலும், முன்பெல்லாம் மொழிப்பாட நூல்கள் ஆண்டுதோறும் மாறறப் படுவதுபோல் இப்பொழுது மாற்றப்படுவதில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். ஒரே பாடநூல் சிலவாண்டுக் காலம் நீடிக்கின்றமையால் வினுவிடை

வெளியிடுவோர் தொழில் செழித்து வளர வாய்ப்பாகின்றது. பாடநூல்கள் மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப விற்பனை யாவதில்லை என்னுங் கருத்து ஈண்டு எண்ணுதற்குரியது. வினவிடை நூல்களைக் கைக்கொண்டு மாணவர்கள் மூலப் பாட நூல்களைப் புறக்கணிக்கின்றனர் என்று மேலே குறிப்பிட்ட கருத்து வலியுறுதல் காண்க.

பள்ளிகளில் முன்பு இயங்கிவந்த வகுப்புநூலகத் திட்டமும் (Class Libraries) இப்பொழுது செயற்படுவதாகத் தெரியவில்லை. இத் திட்டம் செம்மையாகச் செயற்பட்டால் நான்காம் வகுப்பு முதல் மாணவர்கள் நூல் நிலையத்தைப் பயன் படுத்தவும், பொது நூல்களைப் படித்துப் பல்துறை யறிவையும் பெருக்கிக் கொள்ளவும் பழகிக் கொள்வர்; பயன்பெறுவர். கழகமும் மற்றும் பல பதிப்பகங்களும் இதற்கேற்பப் பற்பல நூல்களை வெளியிட்டுள்ளன. மாணவர்தம் படிநிலைக்கேற்ப் பலதுறைகளையும் சார்ந்து 321 நூல்கள் அடங்கிய பள்ளிமாணவர் நூற்பேழை ஒன்றைக் கழகம் உருவாக்கி யுள்ளது. இப் பேழையில் மேற்படி நூல்கள் பொருளமைப்பு முறைப்படி பாகுபடுத்தப் பட்டு 45 அழகிய அட்டைப் பெட்டிகளில் வைக்கப்பெற்றிருக்கின்றன.

பள்ளி மாணவர்கட்கு வைக்கப்பட்டுள்ள நூலகக் கட்டணமும் மிகவும் குறைவு. மாணவர் எண்ணிக்கை மிகுதியாக உள்ள பள்ளிகளில் மட்டுமே பல்வகை நூல்கள் இடம் பெற முடிகின்றது. மாணவர் தொகை குறைவான பள்ளிகள் அவ்வாறு பல்வகை நூல்களையும் வாங்க இயலவில்லை. கட்டடம் தகுந்தபடி இல்லாமையால் நூல்களை வாங்கிவைக்க இயலாத பள்ளிகளும் உண்டு. பொதுவாகப் பதிப்பாளர்களின் போட்டியினாலும், முறைகேடான செயல்களினாலும் அனைத்து நூலகங்களிலுமே தகுதி வாய்ந்த நூல்கள் இடம்பெற இயலவில்லை.

மாணவர்களும் மற்றவர்களும் தரமான நூல்களைப் படிக்கும் வழக்கம் மிகுதியாக இல்லாமையால் நல்ல நூல்களை வெளியிடும் பதிப்பு நிறுவனங்கள் செழித்து வளர முடியவில்லை. பாடநூல்களை வெளியிட்ட சில நிறுவனங்கள் பொது நூல்கள் சிலவற்றையும் வெளியிட்டு வந்தன. அரசு பாடநூல்களை வெளியிடுகின்றமையால் அந் நிறுவனங்கள் பல செயலிழந்து நின்று போயின.

திருமடங்கள் சிலவும், மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் போலும் தமிழ்ச் சங்கங்களும், மற்றும் சைவசித்தாந்த மகாசமாசம், தேவகோட்டை சிவாகம சங்கம் முதலியன

வும், திருப்பெருந்திரு ஆறுமுக நாவலரவர்கள் நிறுவனமும் தக்கபல நூல்களை வெளியிட்டன. அவையெல்லாம் இப்பொழுது முனைப்பாகச் செயற்பட முடியவில்லை. அவ் வெளியீடுகள் கிடைப்பதும் அரிதாக உள்ளது. பண்டாரகர் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்த நூல்களிற் சில அவர்கள் பெயரிலுள்ள நூல்நிலைய வெளியீடாக மறுபதிப்பு வெளியிடப் பெறுகின்றன.

தினமணி, கலைக்கதிர் போன்ற இதழ் நிறுவனத்தினர் சிலரும் தனியார் சிலரும் தக்க ஆசிரியர்களைக் கொண்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் பல்துறை நூல்களைத் திட்டமிட்டு வெளியிட்டு வந்தனர். அவர்களும் எண்ணியபடி செயற்பட முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. பள்ளி கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியன்மார் சிலர் தொடர்ந்து பல நூல்களை எழுதி வருகின்றனர். சிலர் தாமே அவற்றைப் பதிப்பிதது‌ப் பிற பதிப்பகங்களில் விற்பனைக்குத் தருகின்றனர். மற்றுஞ் சிலரோ தாமே எழுதிப் பதிப்பிப்பதோடும் அவற்றை விற்பனை செய்யும் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர். ஆசிரியப் பணியில் இல்லாத அறிஞர் சிலரும் இங்ஙனம் நூல் வெளியிடுவதிலும் விற்பனை செய்வதிலும் ஆர்வங்கொண்டுள்ளனர். சொந்தமாக நூல் வெளியிடுவோரிற் பெரும்பாலர் அவற்றை விற்பனை செய்ய மாட்டாமல் அல்லலுறுவதும் தெரியவருகின்றது.

சில நூல்கள் மறுபதிப்பு வராமலேயே அழிந்துபோவதையுங் காணுகின்றோம். உயர்திரு. உ. வே. சா. அவர்கள் அரிய பல சிற்றிலக்கியங்களைத் தொடர்பாக வெளியிடும் பொருட்டு 500 கையொப்பக்காரர்களைச் சேர்க்க முயன்று 1937இல் ஓர் அறிக்கை வெளியிட்டனர். ஆனால் அது நிறைவேறவில்லை.

உருசியாவில் தமிழ் நூல்களைக் கூடுதலான படிகள் அச்சிட்டுக் குறைந்த விலை வைத்தும் தமிழகத்தில் சில பேரூர்களில் கிளை நிலையங்கள் அமைத்தும் விற்பனை செய்து வருகின்றனர். அங்கு நம் தெய்வத் திருக்குறளை உருசிய மொழியில் முதற்கண் உரை நடை வடிவில் மொழிபெயர்த்து 50,000படிகள் அச்சிட்டு வெளியிட்டனர். அவ்வாறே ஓராண்டுக்கு முன்பு அதனைச் செய்யுள் நடையிலும் மொழிபெயர்த்து 50,000படிகளே வெளியிட்டனர். அப்படிகள் அனைத்தும் வெளிவந்தவுடனே விற்றுத் தீர்ந்துவிட்டன. இதனால் உருசிய மக்களின் நூல் பயில் ஆர்வம் எத்தகையது என்பது புலப்படுகின்றது. இந்நிலையோடு வைத்து எண்ணின் தமிழ் மக்களின் நிலை எத்துணை வருந்தத்தக்கது என்று எண்ணிப்பார்மின் !

ஆங்கிலப் பேரறிஞர்கள் பலர் தமிழ் இலக்கணம், இலக்கியம், சமயம், கலை, வரலாறு முதலியனபற்றி எழுதியுள்ள அரும் பெரும் நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தினும் தமிழ்மொழிபெயர்ப்பாகவும் வெளியிட அணியமாக (தயாராக) உள்ளன. அவ்வாறே அரிய பல சிற்றிலக்கியங்களையும் அழிவுரு வண்ணம் அச்சிட்டு வெளிப்படுத்தவும், ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள நூல்களை மறுபதிப்பு செய்யவும், அவ்வகையில் புது நூல்கள் வெளியிடவும் எண்ணியுள்ளோம். ஆனால், மேற்கூறிய பல்வேறு நிலைகளையும் எண்ணித் தயங்க வேண்டியுள்ளது.

இனி, பொதுமக்கள் பயன்படுத்தி நன்மையுறும் பொருட்டு ஆங்காங்குப் பெருந்தகையாளர் சிலர் தனியே நிறுவிய நூல் நிலையங்கள் பல தக்க பொருள்வளம் இன்மையால் இயங்க மாட்டாமல் செயல் குன்றியுள்ளன. இவை செம்மையாக இயங்குதற்குத் தக்க உதவிகளைச் செய்வது அரசின் தலையாய கடமையாகும். புதிதாக ஒன்றைத் தோற்றுவிப்பதைவிடச் செயலிழந்திருப்பது திறம்படச் செயற்படுதற்கு ஆவன செய்யின் பொருட் செலவும் முயற்சியும் குறைவாகும். அன்றியும் அவற்றைத் தோற்றுவித்த பெருமக்கட்கு நன்றி செலுத்துவதாகவும் அமையும்; அவர்தம் நோக்கத்தை நிறைவேற்றிய பெருமையும் உண்டாம். இப்பொழுதுள்ள பொது நூலகத் துறையும் அதன் இயக்கமும் செவ்விய முறையில் நற்பணிகளாற்றுதற்கு அரசு ஆவனசெய்தல் வேண்டும். இவற்றைப் பொதுநலங்கருதி அரசுக்குக் கோரிக்கையாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அரசு பாடநூல் நிறுவனம் ஏற்படுவதற்குமுன் பல பதிப்பு நிறுவனங்கள் பாடநூல்களோடு பல தலைப்புகளில் வகுப்புகட்கேற்றவாறு துணைப்பாட நூல்களை வெளியிட்டு வந்தன. அதனால் மாணவர்கள் பல்வேறு தலைப்புகளில் நூல்களைப் பயில்வதற்கு வாய்ப்பு இருந்தது. அவற்றிற்கு வினாவிடை நூல்கள் எழுதப் பெறவில்லை. ஆனால், இப்போது துணைப் பாடநூல்கட்கும் வினாவிடை நூல்கள் வெளியிடப் பெறுகின்றன. அரசு இதனைச் சிந்திக்குமாக!

'கற்றனைத்தூறும் அறிவு' என்ற பொய்யா மொழியின்படி மாணவர்களும் பொதுமக்களும் பல்வகை நூல்களைப் பயின்று அறிவு பெறுவதற்கு யாண்டும் நூல் நிலையங்கள் சிறப்புற இயங்க வேண்டுமென்பதும் அத்துறைக்குரிய இயக்கமும் அதற்காவன உரிய காலங்களிலே செய்கின்றதா என்பதும் அரசு கவனத்திற்குரியன.

வ. சு.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

வீள்—விரும்பற் கருத்து வேர்ச்சொல்.

இழைத்தல் மொழிச் (Articulate Speech) சொற்கள், பெரும்பாலும் உகரச்சுட்டினின்று தோன்றிய உல் என்னும் மூல வேரினின்றும் குல், சுல், துல், நுல், புல், முல் என்னும் வழி வேர்களினின்றுமே தோன்றியுள்ளன. தமிழில் வுகரம் சொன் முதல் வராமையால், வகரமுதற் சொற்களெல்லாம் புல், முல் என்னும் இரு வேர்களினின்றும் அவற்றினின்று தோன்றிய சொற்களினின்றுமே திரிந்துள்ளன. வகர முதலென்றது வகர மெய்யொடு கூடிச் சொன்முதல் வரும் எண்ணுயிரையும்.

வட்டக் கருத்து வேரான வல் என்பது முல் என்பதன் திரி பென்று முன்னரே காட்டப்பட்டது. விரும்பற் கருத்து வேரான விள் என்பது புல் என்னும் வேரின் திரிபான பிள் என்னும் அடியின் திரிபென்று இங்கு விளக்கப்படும்.

புல்லுதல் = பொருந்துதல், ஒத்தல், தழுவுதல், புணர்தல், நட்பாதல், விரும்புதல். புரிதல் = விரும்புதல். புகல்தல் = விரும்புதல். புல்—புள்—பிள்—பிண்—பிணு—பிண—பிணவு—பிணவல், பிணை. பிள்—பெள்—பெண்—பேண். "பிணையும் பேணும் பெட்பின் பொருள." (தொல். உரி. 40). பிள்—Gk. Phil.

பிள்—விள் = விளை = விருப்பம். விளையாடுதல் = விருப்ப மாய் ஆடியோடித் திரிதல் அல்லது ஒருவினை செய்தல்.

"கெடவரல் பண்ணை யாயிரண்டும் விளையாட்டு." (தொல். உரி.) என்பதற்கேற்ப, விளையாடல் என்னும் சொற்கு, பயிர்த் தொழில் செய்தல்போல் நடித்து மகிழ்தல் என்னும் பொருளும் பொருந்துமேனும், விரும்பியாடுதல் என்னும் பொருளே சிறந்த தாகத் தோன்றுகின்றது.

விள்—விழு. விழுதல் = விரும்புதல், விருப்பங் கொள்ளு தல். "ஐம்புலன்மேல் விழுந்து" (திருநூற். 13).

விழு—வீழ். வீழ்தல் = விரும்புதல். "தாம்வீழ்வார் மென் றோட் டுயிலி னினிது கொல்" (குறள். 1103).

விழு—விழை. விழைதல் = விரும்புதல். "இன்பம் விழை யான் வினைவிழைவான்" (குறள். 615).

விழை—விழைச்சு=புணர்ச்சி. (பிங்.) ஒ. நோ: Gk. *Philos*, desire.

விழை — விழைச்சி = 1. புணர்ச்சி. "அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சி தீதென்ப". (இறை. 1, உரை). 2. இன்ப நுகர்ச்சி. "மன்னர் விழைச்சி" (சிலப். 2 : 2, உரை).

விழை—விழைந்தான்—விழைந்தோன்=(பிங்.) நண்பன், கணவன்.

விழை—விடை—விடையன்=காமுகன். (இ. வ.)

விடை — விடாய். விடாய்த்தல் = 1. ஆசைப்படுதல். 2. தாகமெடுத்தல். "விடாய்த்த காலத்திலே வாய் நீருறு தற்கு" (மலைபடு. 136, உரை). 3. களைப்படைதல். "எருது உழுகிறது, உண்ணி விடாய்க்கிறது." (பழ.).

விடாய்=1. ஆசை. (இ. வ.). 2. தாகம். தண்ணீர் விடாயெடுத்தால் (இராமநா. யுத்த 59). களைப்பு (நாமதீப. 633).

விள்—விர்—விரு—விரும்பு. விரும்புதல்=ஆசைப்படுதல்.

விரும்பு—விருப்பு=ஆசை, அன்பு. "விருப்பருச் சுற்றம்" (குறள். 522).

விருப்பு—விருப்பம்=1. ஆசை. (சூடா.) 2. அன்பு. 3. பற்று (பிங்.).

விரு—விருந்து=1. வீட்டிற்கு அல்லது ஊருக்குப் புதிதாய் வந்தவர்க்கு விரும்பிப் படைக்கும் சிறந்த வுணவு. "யாது செய்வேன் கொல் விருந்து" (குறள். 1211). 2. வீட்டிற்குப் புதிதாக வந்த விருந்தாள். "விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கை" (புறநா. 266). 3. போற்றப்படும் விருந்தாள். "விருந்தா யடைகுறுவள் விண்" (பு. வெ. 3 : 12). 4. புதியவள். 5. புதுமை. விருந்து புனலயர (பரிபா. 6: 40). 6. புதுவகையான பனுவல், எண் வகை வனப்புக்களு ளொன்று. "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல். செய் 237). 7. (இக்கா.) சிறந்தவுண்டி.

விருந்து—விருந்தப் =புது மனைவி, மனைவி. (சூடா.).

விருந்து — விருந்தனை = விருந்தோம்பும் அல்லது புது மனைவி, மனைவி. (பிங்.).

விருந்தாடுதல்=ஒரு வீட்டிற்கு விருந்தாளாகப் போதல்.

விருந்தாடு—விருந்தாடி=விருந்தாளி.

விருந்தோம்புதல்=புதிதாக வந்த விருந்ினரைப் பேணுதல்.

விருந்தினன்=1. விருந்தாளி. 2. புதியவன்.

விள்—வெள்—வெண்டு. வெண்டுதல் = இல்லாததற்கு ஆசைப்படுதல். அவன் சோற்றுக்கு வெண்டிக் கிடக்கிருன். (இ. வ.)

வெள்—வெள்கு—வெஃகு. வெஃகுதல்=1. மிக விரும்புதல். ''அருள் வெஃகி'' (குறள். 176). 2. பிறர் பொருள்மேல் ஆசை கொள்ளுதல். இலமென்று வெஃகுதல் செய்யார் (குறள். 174).

வெஃகல்=1. மிக விருப்பம். (பிங்.) 2. பேராசை. (சது.)

வெஃகாமை=1. அவாவின்மை. 2. பிறர் பொருளை வெளவக் கருதாமை. ''வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்'' (குறள். 178).

வெள்—வெய்—வெய்யன்=விருப்ப முள்ளோன். ''நல்லூரன் புதுவோர்ப் புணர்தல் வெய்யனுயின்'' (கலித். 75 : 10).

வெய்—வெய்யவன்=விருப்பமுள்ளவன்.

வெய் — வெய்யோன் = விருப்பமுள்ளோன். ''பொன்னறைதான் கொடுத்தான் புகழ் வெய்யோன்'' (சீவக. 237).

வெய் — வெய்ம்மை — வெம்மை=விருப்பம், வேண்டல். ''வெம்மை வேண்டல்'' (தொல். உரி. 36).

ஒ. நோ : சென்—செய்—செய்ம்மை—செம்மை.

வேய்—வேய்ந்தோன்—வேந்தன்.

வெள்—வேள். வேட்டல் (வேள்தல்)=1. விரும்புதல். வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது (புறநா. 20). 2. நட்டல், நட்புச் செய்தல். ''மலர்ந்து பிற் கூம்பாது வேட்டதே வேட்டதா நட்பாட்சி'' (நாலடி. 215). 3. மணம் புரிதல். ''மெய்ந்நிறை மூவரை மூவரும் வேட்டார்'' (கம்பரா. கடிமணப். 102). 4. தாகங் கொள்ளுதல். 5. வேள்வி செய்தல். ''ஓதல் வேட்டல்'' (பதிற்றுப். 24 : 6). 6. இரத்தல். க. பேள் (b).

வேட்குஞ் செயல் ஆரியரதாயினும், வேட்டல் என்னுஞ் சொல் தமிழெனவறிக.

வேட்டகம் (வேட்ட அகம்)=மணஞ் செய்த இடம், மனைவி பிறந்த வீடு.

வேள்=1. விருப்பம். 2. திருமணம். "வேள்வாய் கவட்டை நெறி" (பழ. 360). 3. காதலை யுண்டு பண்ணுபவனாகக் கருதப்படும் காமன். "வேள்பட விழிசெய்து" (தேவா. 1172: 8). 4. காதல் நோயை விளைத்தவனாக வேலன் வெறியாட்டிற் கூறப்படும் முருகன். (பிங்). 5 வேளாண்மை செய்யும் வேளாளர் தலைவனான குறுநில மன்னன்.

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி." (தொல். மர. 82)

"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப அவர்பெறும் பொருளே." (ஷை ஷை 83)

"வில்லும் வேலும் கழலுங் கண்ணியும்
தாரும் ஆரமும் தேரும் வாளும்
மன்பெறு மரபின் ஏனோர்க்கு முரிய." (ஷை ஷை 84)

6. சிற்றரசன் (சூடா.). 7. சிறந்த ஆண்மகன். (யாழ். அக.). 8. பண்டைத் தமிழரசரால் வேளாண் தலைவர்க்கு அளிக்கப்பட்ட சிறப்புப் பெயர். "செம்பியன் தமிழவேள் என்னுங் குலப் பெயரும்" (S. I. I. iii, 221). 9. குறுநில மன்னரான வேளிர் குலத்தான். "தொன்முதிர் வேளிர்" (புறநா. 24). 10. வேளிராண்ட வேள்புல வரசனான சளுக்கு வேந்தன். (பிங்.) 11. தாகம்.

வேள்புலம்=வேளிராண்ட நாடு.

வேள்புலவரசன்=வேளிர் வழிவந்த சளுக்கிய வரசன்.

வேள்—வேள்வு=1. திருமணத்தில் மணமக்கள் வீட்டார் எடுக்கும் உணவுப் பண்ட வரிசை. (செ. நா.). 2. வேள்வி. "விழவும் வேள்வும் விடுத்தலொன் றின்மையால்" (சீவக. 138).

வேள்—வேள்வி=1. திருமணம். "நாம் முன்பு தொண்டு கொண்ட வேள்வியில்" (பெரியபு. தடுத்தாட். 127). 2. கொடை. (பிங்.). 3. பூசனை. "வேள்வியி னழகியல் விளம்பு வோரும்" (பரிபா. 19: 43). 4. அறவினை. "ஆள்வினை வேள்வியவன்" (பு. வெ. 9 : 27). 5. விருந்து. 6. களவேள்வி. "பண்ணிணைஇய பயங்கெழு வேள்வியின்" (அகநா. 13). 7. ஆரிய வேள்வி. "முன்முயன் றரிதினின் முடித்த வேள்வி" (அகநா. 220).

ம., தெ., வேள்வி, க. பேலுவெ (b).

வேள்—வேளாளன்=புதிதாய் வந்தவரை விரும்பி விருந்தோம்பிப் பேணுபவன்.

"வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்" (திரிகடு. 12).

1. வேளாண்மை=புதியவரை விருந்தோம்பிப் பேணுந் தன்மை. "விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள். 81). 2. பிறரைப் பேணிக்காக்குந் தன்மை. "வேளாண்மை செய்து விருந்தோம்பி" (பழ. 151). 3. வேளாளர் செய்யும் பயிர்த் தொழில்.

வேளாண்மை — வெள்ளாண்மை — வெள்ளாமை (கொ வ)=1. பயிர்த்தொழில். 2. ஒருமுறை விளைப்பு.

வேள் — வேளான் = ஒருசார் பணியாளர்க்குப் பண்டை வேந்தர் வழங்கிய பட்டப் பெயர். "மதுராந்தக மூவேந்த வேளான்" (S. I. I. ii, 10).

வேள் — வேளிர் = 1. பண்டைத் தமிழ் நாடாண்ட வேளாண்குடிக் குறுநில மன்னர். "நாற்பத் தொன்பது வழி முறை வந்த வேளிருள் வேளே" (புறநா. 201). 2. சிற்றரசர். (சூடா.). 3. சளுக்கிய வரசர். (திவா.)

வேளாளன் (ஆ. பா.) — வேளாட்டி = அரண்மனையில் அல்லது பெருமக்களில்லத்தில் பணி செய்யும் வேளாளர் குலப் பெண்.

வேளாட்டி—வெள்ளாட்டி=பணிப்பெண்.

வேள்—வேளம்=பண்டைத் தமிழ் வேந்தர், சிறப்பாகச் சோழர், தம்மாற் கொல்லப்பட்ட அல்லது சிறை பிடிக்கப்பட்ட பகை வேந்தரின் தேவியரை, வேளாட்டியராக அல்லது அடிமை யராக வாழும்படி வைத்த, அரணிடம் அல்லது சிறைக்கோட்டம். "மீனவர் கானம்புக.......வேளம் புகு மடவீர்" (கலிங். 41), "வீரபாண்டியனை முடித்தலை கொண்டு அவன் மடக் கொடியை வேளமேற்றி" (S. I. I. iii, 217).

வேள் + நாடு = வேணாடு, திருவாங்கூர் அரசியத்தின் பெரும் பகுதி அடங்கிய நிலப்பகுதி, பண்டைப் பன்னிரு கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று.

வேள் —வேண் =1. விருப்பம். (யாழ். அக.). ம. வேண். 2. வேணாடு. "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி" (நன். 272, மயிலை).

வேண்+அவா =வேணவா (மீமிசைச்சொல்) = பெரு விருப்பம்; வேட்கைப் பெருக்கம்.

இதை வேட்கை+அவா என்று பிரிப்பது பொருந்தாது.

வேள்+மகன்=வேண்மகன்—வேண்மான் = வேளிர்குல மகன், வேளிர் குடியான். "நன்னன் வேண்மான்" (அகநா. 97).

வேள்+மகள்=வேண்மகள் — வேண்மாள்=1. வேளிர் குலமகள், வேளிர் குடியாள். "வேண்மாள் அந்துவஞ் செள்ளை" (பதிற்றுப். 9. ஆம். பதி).

வேள் — வேட்கை = 1. விருப்பம். 2. பற்றுள்ளம். "வேட்கை யெல்லாம் விடுத்து......உன் திருவடியே சுமந்துழலக் கூட்டரிய திருவடிக்கட் கூட்டினை" (திவ். திருவாய். 4 : 9 : 9). 3. காம விருப்பம். (நம்பியகச். 36, உரை). 4. சூலியர் வயா. 5. தாகம், நீர் விருப்பம்.

வேள் + நீர் = வேணீர் = தாகந் தணியப் பருகுநீர். "வேணீ ருண்ட குடையோ ரன்னர்" (கலித். 23).

வேட்கை நீர்=தாகந் தணிக்கு நீர். (W.).

வேள்+நூல் = வேணூல்=காமநூல். "அம்மட வாரியலானவும்......ஆடவர் செய்கையும்......விளம்பிடும் வேணூல்" (கந்தபு. இந்திரபுரி. 25).

வேள் —வேட்பு=விருப்பம் (யாழ். அக.). வேட்பு—வேட்பாளர் (இக்கா.)=நாடாளுமன்ற அல்லது நடுவணுளு மன்ற வுறுப்பாண்மை விரும்புவோர்.

வேள்—வேட்சி=விருப்பம். வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே. (திருமந். 437).

வேள்—வேட்சை=விருப்பம் (யாழ். அக.).

வேள் — வேண்டு. வேண்டுதல் = 1. விரும்புதல். பகலோடு செல்லாது நின்றீயல் வேண்டுவன் (கலித். 145). 2. மன்றுடுதல் (பிரார்த்தித்தல்). வேண்டித் தேவ ரிரக்கவந்து பிறந்ததும் (திவ். திருவாய். 6 : 4 : 5). 3. கோருதல். அண்மையில் வெளிவர விருக்கும் எங்கள் கழக ஆண்டுமலருக்கு ஒரு கட்டுரை விடுக்குமாறு தங்களை வேண்டுகின்றேன்.

வேண்டல்=1. விரும்புகை. 2. குறையிரப்பு (விண்ணப்பம்).

வேண்டற்பாடு=1. விருப்பம். (தக்கயாகப். 506, உரை). 2. தேவை. 3. பெருமை. "அவன் தொழும்படியான வேண்டற்பாடுடைய தான்தொழா நின்றான்" (ஈடு, 2 : 4. 4). 4. தொக்கு நிற்குஞ் சொல் அல்லது சொற்றொடர். நின்றவில்லி. "வீரபத்திர தேவர்க்கு எதிரே பொருதற்கு (நின்றவில்லி) என்பது வேண்டற்பாடு" (தக்கயாகப். 704, உரை).

வேண்டாதவன் = விரும்பப் படாதவன், தேவையில்லாத வன், பயனற்றவன், பகைவன்.

வேண்டா = 1. (வி. மு.) வேண்டியதில்லை. "அறத்தா றிதுவென வேண்டா" (குறள். 37). 2. (பெ.) தேவையல்லா தன. வேண்டா கூறிப் பயனில்லை. 3. விரும்பா. (ப. பல. எ. ம. வி. மு.) மக்கள் போன்றே விலங்கு பறவைகளும் கூண் டுள்ளிருக்க வேண்டா.

வேண்டாம் = 1. தேவையின்மை குறிக்கும் வினைமுற்று. எங்கட்குப் பணம் வேண்டாம்; பொத்தகம்தான் வேண்டும். 2. வெறுப்பானது என்பதைக் குறிக்கும் வினைமுற்று. எங்கட்கு இந்தி வேண்டாம்; ஆங்கிலந்தான் வேண்டும். 3. செய்யற்க என்னும் விலக்குப் பொருளில் வரும் துணைவினை.

"தெய்வத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்." (உலக.)

வேண்டாம்—வேண்டா (இலக்கிய வழக்கு).

வேண்டாமை = 1. விரும்பாமை. 2. அவாவின்மை. "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை" (குறள். 363). 3. வெறுப்பு. "வேண்டுதல் வேண்டாமையிலான்" (குறள். 4).

வேண்டி = பொருட்டு. மாணவரும் மாநாட்டிற்கு வர வேண்டி இன்று விடுமுறை விடப்பட்டது.

வேண்டிக் கொள்ளுதல் = ஆர்வத்தொடு பணிந்து கேட் டல், தெய்வத்திடம் ஊக்கமாக மன்றுடுதல்.

வேண்டிய = (பெ. எ.) 1. விரும்பிய. 2. தேவையான. 3. இன்றியமையாத. 4. போதுமான. 5. மிகுதியான.— பெ. விரும்பியவை. "வேண்டிய வேண்டியாங் கெய்தலால்" (குறள். 5). வி. மு. வேண்டி. வேண்டிய – வேண (கொச்சை).

வேண்டியவன் = 1. விரும்பியவன். 2. விருப்பமானவன். 3. நெருங்கிய நண்பன் அல்லது உறவினன். 4. தேவையான வன். 5. மன்றுடியவன். வேண்டியது—வேணது (கொச்சை).

வேண்டுதல் = விருப்பு. "வேண்டுதல் வேண்டாமை யிலான்" (குறள். 4).

வேண்டுகோள் = 1. கோரிக்கை. 2. மன்றுட்டு (பிரார்த் தனை). "வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டுகோ ளென்றார்" (திருவிளை. விறகு. 51).

வேண்டும்—(1) ஒழுங்கான வினை (*Regular Verb*)

1. படர்க்கை எதிர்கால வினைமுற்று.

எ-டு: அவன் வேண்டும் (வேண்டுவான்), அவள் வேண்டும் (வேண்டுவாள்), அது வேண்டும், அவை வேண்டும்.

2. பன்மை யேவல் வினை.

எ-டு: நீம் (நீயிர், நீவிர், நீர்) வேண்டும்.

3. எதிர்காலப் பெயரெச்சம்.

எ-டு: வேண்டும் பொருள்.

இம் மூவகை வினையிலும், வேண்டுதல் வினை விரும்புதல், கோருதல், இரத்தல், கெஞ்சுதல், மன்றாடுதல் என்னும் பொருளது.

வேண்டும்—(2) ஒழுங்கற்ற வினை (*Irregular Verb*)

வேண்டும் = (தனிவினையும் துணைவினையும்) 1. தேவை குறிக்கும் வினை. வீடுகட்ட எனக்குப் பணம் வேண்டும். 2. இன்றியமையாமை குறிக்கும் வினை. நோயாளிக்கு மருந்து வேண்டும். 3. விருப்பங் குறிக்கும் வினை. என் பேரனுக்குப் பேரன் எழுநிலை மாடத்திலிருந்து பொற்கலத்திற் பாலருந்த, நான் கண்ணாரக் காண வேண்டும். 4. ஒரு பெருவிருப்பங் குறிக்கும் வினை.

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்"

(பெரியபு. 30 : 60)

5. உறவு குறிக்கும் வினை. அவன் உனக்கு என்ன வேண்டும்? அவன் எனக்கு மாமன் வேண்டும். 6. கட்டாயம் அல்லது தப்பாமை குறிக்கும் வினை. உலக முழுதாள்வானும் ஒரு நாளிற் சாக வேண்டும், மெய்யெழுத்தை யெல்லாம் புள்ளியிட்டெழுதல் வேண்டும், தொடர்வண்டி வழிப்போக்க ரெல்லாம் சீட்டு வாங்கியாதல் வேண்டும்.

'வேண்டாம் என்னும் எதிர்மறை வினையும் ஒழுங்குள்ளதும் இல்லதும் என இருவகைப்படும்.

(1) ஒழுங்குள்ள வினை (Regular Verb) 'செய்யாம், என்னும் வாய்பாட்டுத் தன்மைப் பன்மை எதிர்கால வினை முற்று.

எ-டு: யாம் வேண்டாம் = யாம் விரும்போம்.

(2) ஒழுங்கற்ற வினை (Irregular Verb).

எ-டு: எனக்கு நீ (உன் தொடர்பு) வேண்டாம், "நெஞ் சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்" (உலக).

'வேண்டும்' என்னும் உடன்பாட்டு வினையும் 'வேண்டாம்' என்னும் எதிர்மறை வினையும் ஒழுங்கற்ற வினையாயின், ஒரு குறிப்பிட்ட திணை பால் எண் இடத்திற்கு மட்டும் உரியன வாகாது இருதிணை மூவிட ஐம்பாலுக்கும் பொதுவாய், 4 ஆம் வேற்றுமைப் பெயரையும் தொழிற் பெயரையும் நிகழ்கால வினை யெச்சத்தையும் அடுத்து வருதல் காண்க.

வியங்கோள் வினை. "வேந்தனீயாகி வைய மிசைபடக் காத்தல் வேண்டும்" (சீவக. 201).

வேண்டும்—வேணும் (கொச்சை).

வேண்டுமென்று=1. நெஞ்சார, வேட்டை யாடுகையில் வேண்டுமென்று அவனைச் சுட்டான். 2. ஒட்டாரமாய். வேண்டுமென்று தன் குலத்தானையே வேலையிலமர்த்தினன்.

வேள்—வேட்கு. வேட்குதல்=விரும்புதல், வேண்டுதல்.

வேட்கு—க. பேக்கு (b). வேட்கும்—க. பேக்கும் (b)= வேண்டும்.

ஒ. நோ. E. beg, ச. பிக்ஷ் (bhiksh). வேட்டல்=ஏற்கை, இரத்தல் (அரு. நி).

வேண் — வேடு — வேடை=1. வேட்கை. "வள்ளிக்கு வேடை கொண்ட பெருமாளே" (திருப்பு. 288). 2. காம நோய். "கொண்டதோர் வேடை தீரும்" (கந்தபு. ததீசியுத். 74). 3. தாகம். "சால வருந்தின வேடையோடி" (கம்பரா. திருவடி. 24).

வேள்—வேட்டம் (வேள்+தம்)=விருப்பம். "உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்கு" (புறநா. 214). 2. விரும்பிய பொருள். "வேட்டம் போகிய மாஅலஞ்சிறை மணிநிறத் தும்பி" (கலித். 46). 3. விரும்பிச் செய்யுந் தொழில் அல்லது வினை, வேட்டை. "வயநாய் பிறபட வேட்டம் போகிய குற வன்" (அகநா. 182). தலைவேட்டை யாடுங் கொலை (பிங்.).

ம. வேட்ட, தெ., க. வேட்ட.

வேள்—வேட்டை (வேள்+தை)=விலங்கு பறவைகளை விரும்பிப் பிடிக்கும் வினை அல்லது தொழில். "வேட்டை வேட்கை மிக" (கம்பரா. நகர்நீங். 74). 2. வேட்டையிற்

கிடைக்கும் பொருள். "பிடித்தலு நமக்கு வேட்டை வாய்த்த தின்று" (திருவாலவா. 44 : 38). 3. வேட்டையில் நேருங் கொலை. "ஆடுவனே யின்னும் ஆருயிர் வேட்டை" (திருநூற். 56).

ம. வேட்டை, தெ. வேட்ட, க. பேட்ட (b).

வேட்டம்—வேட்டுவன் =1. வேட்டைக்குச் செல்வோன். "யானை வேட்டுவன் யானையும் பெறுமே" (புறநா. 214). 2. வேடன். "வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" (குறள். 274). 3. குறிஞ்சிநில ஆடவன். குறிஞ்சி வாணன். "ஆயர் வேட்டுவர்" (தொல். அகத். 21).

வேட்டுவன் — வேடுவன் = வேடன். "வீரத்தாலொரு வேடுவனாகி" (தேவா. 485 : 4).

வேடுவன்—வேடு =1. வேடன் (இலக். அக.). 2. வேடர் குலம். "வேடுமுடை வேங்கடம்" (திவ். இயற். நான்மு. 47). வேடர்கூட்டம். "வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ" (கம்பரா. குகப். 22). 3. வேடர் தொழில். "வேட் டொடு வேய்பயி லழுவத்துப் பிரிந்த நின்னை" (அகநா. 318). 4. வரிக் கூத்து வகை. (சிலப். 3 : 13, உரை).

வேடு—வேடன் =1. வேட்டுவன். "வெந்தொழில் வேட ரார்த்து" (சீவக. 421). 2. பாலைநில வாணன். (திவா.)

ம. வேடன், தெ. வேட்ட, க. பேட (b), து. வேட்ட (vēḍḍa).

———

மொழியின் தோற்றமுறை

ஒரு மொழியின் தோற்றமுறையினை நோக்கவல்ல நுண்ணறிவாளர்க்கு, விலங்கினங்களைப் போல் அநாகரிக நிலையிலிருந்து சொற்சொல்லுமாறு அறியாது குறிப்பான் உணர்த்திப், பின்னும் விளங்காமையான் இயற்கையின் நிகழும் ஒலி வகை பற்றிக் கூற்று நிகழ்த்திச் சிறிது சிறிதாய்ச் சொற்சொல்லுமாறு அறிந்து அறிவுகூடப் பெற்றுவரும் மக்கட்டன்மையும், தாய்தந்தையர் கூட்டுறவானே சொற்சொல்லுமாறு அறிந்து அறிவு கூடிவருஞ் சிறுமகார் இயல்பும் தம்முள் ஒத்த பெற்றிமை யுடையவாமாறு இனிது விளங்கும்.

மறைமலையடிகள்

(மறைமலையடிகளார் அறிவுரைக் கோவை பக்கம் 76)

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௩க, பரல் எ, பக்கம் ௩௩௩இன் தொடர்ச்சி)

'அவையே தானேயாய்' என்பது இரண்டாம் நூற்பாவின் முதல் பிரிவு. 'அவையேயாய்', 'தானேயாய்', 'அவையே தானேயாய்' என்று மூன்று வகையாக இது கொள்ளப்படும். இவற்றில், 'அவையேயாய்' என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு வெண்பாவும், 'தானேயாய்' என்பதற்கு வேறோர் எடுத்துக்காட்டு வெண்பாவும், 'அவையே தானேயாய்' என்பதற்குப் பிறிதோர் எடுத்துக்காட்டு வெண்பாவும், இம் மூவகைக் கலப்பும் சேர்ந்ததே. இரண்டன்மைக் கலப்பாமாதலின் அதற்கும் அதற்கு அப்பாற்பட்டும் விளங்குதற்குரிய இன்னொரு வெண்பாவும் ஆக நான்கு வெண்பாக்கள் இம் முதல் பிரிவிற்கு எடுத்துக்காட்டுகளாய் வருகின்றன.

அவையேயாய்:

இதற்கு எடுத்துக்காட்டப்படும் உவமை உடலும் உயிரும்; இதைக் குறிக்கும் வெண்பா,

"கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றுங்கு—ஒட்டி;
அவன்உளமா கில்லான் உளம்அவனு மாட்டாது;
அவன்உளமாய் அல்லனுமாம் அங்கு"

என்பது.

உள்ளம் – உயிர்; கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு - நரம்பு முதலியவற்றாற் கட்டப்பட்ட பரு உடம்போடு உட்கருவிகளோடு உயிர் கலந்து, இட்டதொரு பேர் அழைக்க - உடம்புக்கு இட்டதாகிய ஒரு பெயரால் அழைத்தால்; என் என்றுங்கு-உயிர் ஏன் என்று கேட்கிறதே, அதுபோல, ஒட்டி – உயிர்களோடு ஒட்டி நிற்பான் இறைவன்; அவன் உளம் ஆகில்லான்-இறைவன் உயிராக மாட்டான்; உளம் அவனுமாட்டாது – உயிர் அவனுதலும் இயலாது; அவன் உளமாய் அல்லனுமாம் அங்கு - அப் பெருமான் உயிராகவும், உயிர் அல்லாதவனுகவும் அந் நிலையிற் காணப்படுவான்.

உறுப்பு என்பது, உறுப்புக்களோடு கூடிய பரு உடம்பு; உளம் என்பது உயிரை உணர்த்தும்; ஒட்டி-உயிர்களோடு கூடி

நிற்கும் இறைவன்; இது பெயர். ஆகில்லான் - ஆகமாட்டான்; அவனு - அவனுக; ஆம் - ஆவான்; அங்கு - அந் நிலையில்.

இருவர் அன்பர் இருக்கும்போது அவருள் ஒருவரை ஒரு பெயர் கொண்டு அழைத்தால், உடம்புக்கு இட்ட அப் பெயர் தன்னேயே அழைத்ததுபோல எண்ணி, உடம்பினுள் உள்ள உயிர் ஏன் என்று கேட்கிறது; பிறந்து உடம்பு கொண்டு வளர்வதனுல், பெயர்கள் உடம்புக்கு இட்ட பெயர்களாகின்றன. உடம்பை விட்டு உயிர் நீங்கி விட்டால், பெயரும் நீங்கிவிடுகிறது. உடம்புக்கு அப்புறம் பிணம் என்றுதான் பெயர். "பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு" என்பது திருமந்திரம். உயிர் உடலோடு சேர்ந்திருக்கும்போது உடம்புக்கு இட்ட பெயரைத் தன் பெயர்போற் கொள்ளுவதனுல் உடம்போடு அவ்வளவு ஒன்ருய் உயிர் சேர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. 'அவையேயாய்' என்பதற்கு, 'உயிரும் உடம்புமாய்' என்றும், சிறப்பாய் உயிரேயாய் என்றும், பொருளாகின்றது. கடவுள் இவ்வாறு உயிரேயாய்க் கலந்திருக்கிருன். 'அவையேயாய்' என்பதற்கு 'உடலுயிர்ச் சேர்க்கை' இங்ஙனம் எடுத்துக்காட்டாக வந்தது.

'உடலும் உயிரும்' போல் 'கடவுளும் உயிரும் ஒன்றே' என்று எண்ணும்படி சேர்ந்திருந்தாலும், கடவுள் உயிராகாது. உயிரே போல் ஒன்ருகவும், தன் தன்மையில் வேருகவும், கடவுளுக்கு இருக்க முடியும்; உயிருக்கு முடியாது. உயிருக்கு அத்தகைய சிறப்புத் தன்மையில்லை. அந் நிலையில், கடவுளே உயிரை ஒட்டியவனுகவே உயிரே போல் இருப்பான்; முதன்மையாகவும் இருப்பான். உயிர் அவனுகமாட்டாது' என்று இச் செய்யுளில் வருகிறது. கடவுள் தன் இரக்கம் காரணமாக உயிரோடு ஒன்று படுகிருன். உயிர்க்கு அவனைப்போல் அவ்வளவு இரக்கமும் இல்லை, ஆற்றலுமில்லை. உளம் அவனுக மாட்டாதுதான்!

தானேயாய் :

அடுத்த எடுத்துக்காட்டு, 'அகர உயிரும் ஏனை அக்கரங்களும்' ஆகும். அதற்குரிய செய்யுள்:

"ஒன்றென்ற தொன்றேகாண்; ஒன்றே பதி; பசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளேகாண்—ஒன்றின்ருல்;
அக்கரங்க ளின்ரும் அகரவுயி ரின்றேல்;
இக்கிரமத்து என்னும் இருக்கு"

என்பது.

உலக வழக்காயிருந்தாலும் நூல் வழக்கா யிருந்தாலும் இருவகை வழக்கும் பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்படும்.

கடவுள் ஒன்றென்று நூல் வழக்கிலும் வரும்; உலக வழக்கிலும் வரும். இருவகை வழக்குகளுக்கும் சொல்லும் எழுத்துக்களும் வேண்டும்; அதற்கேற்றபடி; இச் செய்யுளில், 'அகர உயிர் முதலிய எழுத்துக்கள்' உவமமாக வந்தன.

ஒன்றென்று சொல்வது, 'கடவுள் ஒரு பொருளே, கடவுள் பலரல்லர்' என்னும் கருத்துடையது. 'ஒன்றே பதி இரண்டில்லை' என்பது அதன் கருத்து.

பதி என்றாலும் பசு என்றாலும் இரண்டும் அறிவுப் பொருளாதலின், இரண்டையும் கடவுள் என்றே சொல்லிவிட்டால் என்ன, என்று தோற்றும். கடவுளறிவு இயற்கையறிவு; எல்லாம் ஒருங்கே அறியும் அறிவு! உயிரறிவு அத்தகைய அறிவன்று; அறிவித்தால் அறியும் அறிவு; தானே அறியாது. உயிரின் அறிவு முற்றறிவன்று. சிற்றறிவிற் சேர்ந்தது. அந்தச் சிற்றறிவும் பாசத்தினாற் கட்டுப்பட்டு அதனாற் 'பசு' என்று பெயர் பெறும்.

கடவுள் தொடர்பில்லாமல் உயிருக்கு இயக்கம் என்பதேயில்லை. அகர உயிர் இல்லாவிட்டால் ஏனைய எழுத்துக்களுக்கும் இயக்கம் இல்லை. அதைப்போலக் கடவுள் இயக்கம் இல்லையானால், உலகுயிர் எதற்கும் இயக்கம் இல்லை. இப்படி மறைமொழி கூறும்.

இதன் உண்மையைச் சிறிது எண்ணிப் பார்ப்பது நல்லது. பொதுவாக வாலாமை உடைய இவ்வுடம்பில் தூய மாயை ஒலியாகவும் ஒளியாகவும் கலந்திருக்கிறது. அவை இரண்டும், மூலாதாரத்திலிருந்து காரண உடம்பின் மூலமாக, நுட்ப உடம்பு பரு உடம்புகளில் வெளிப்படுகின்றது. ஒலியும் ஒளியும் தம்முள் இயைந்தே உள்ளன. கடவுள் தொடர்புக்கு அவை அணுக்கமாதலால், அப் பெருமான் அருளுக்கு அவை (ஒலியும் ஒளியும்) இடமாய் இருக்கின்றன. கருத்துடைய எழுத்துக்கள் 'ஒலி ஒளி' இரண்டுக்கும் சான்று. எழுத்து முதலிய எவ்வகைப் பொருளிலும் ஒலிகளும் ஒளிகளும் உள்ளன; எழுத்துக்களில் மிகு நுட்பமாய் உள்ளன.

வாயைத் திறந்தவுடனேயே 'அ' என்னும் எழுத்துத் தோன்றுகின்றது. 'கரம்' என்னும் சாரியை சேர்த்து 'அகரம் என்று அது சொல்லப்பட்டது. சொல்லுவதற்கு எளிதாய் இருக்கும்பொருட்டுச் சாரியை சேர்க்கப்பட்டது.

அகர உயிர் எல்லா எழுத்துக்களுக்கும் முன்னால் தோன்றுகிறது. மூலாதாரத்து ஒலி, 'ஓம்' எனத் தோன்றும். இது மொத்த ஒலி ஒளி.

ஒலி என்பது காதுக்குக் கேட்கிறது; ஒளி என்பது எழுத்தாகக் கண்ணுக்குத் தெரிகிறது. இரண்டும் சேர்ந்ததே 'ஓம்' என்னும் ஒரு மொழி! அகர உயிர் அதன் முதல் பிரிவு; உந்தியில் பிரிவுபடுகிறது. வாயைத் திறந்து ஒலிக்கும்போது இப் பிரிவு நன்ருய்த் தெரிகிறது. ஆனுல் வாயைத் திறக்கும்போதே அகரம் நுட்பமாய் உண்டாய்விடுகிறது. உகரமும் மகரமும் அதன் பின் தோன்றி 'ஓம்' வெளிப்படுகிறது. இப் பிரிவுகள் உந்தியில் அமைகின்றன.

முதலில் அகரம் தோன்றுகிறபோதே நுட்பமாய்த் தோன்றி விடுதலால், அதன்பின் நுண்ணுடம்பு வழியாகப் பரு உடம்புக்கு வந்து ஒலியுடன் அகர எழுத்தாக வெளிப்படுகின்றது. ஆதலால் காதுக்குப் புலப்படாத அகரமும் புலப்பட்ட அகரமும் என்று, அகரம் இருவகைப் படுகின்றது. வாயைத் திறவாமல், எந்த எழுத்தையும் கூற முடியாது; வாயைத் திறந்ததே அகர உயிர் நுட்பமாய்த் தோன்றிவிடுகிறது; ஆதலால் எல்லா எழுத்துக்களிலும் அகரம் கலந்திருப்பது உறுதியாகிறது; அகரம் கலக்காமல் எந்த எழுத்தும் தோன்றவோ இயங்கவோ இயலாமையால், 'அக்கரங்கள் இன்ரும் அகர உயிர் இன்றேல்' எனப்பட்டது.

புலப்படாத அகர உயிரே, ஏனை எல்லா எழுத்துக்களுக்கும் முன் தோன்றி அவற்றில் இரண்டறக் கலந்து உடனுகி, அவற்றின் ஒலி ஒளிகளுக்கும் இயக்கங்களுக்கும் காரணமாகின்றது. இதனுல், முதலில் அகர ஒலி தோன்றுகிறது என்றும், அகர உயிர் இல்லையென்ருல் ஏனை எழுத்துக்களும் இல்லையென்றும் மறைநூல் கூறுகின்றது.

அதுபோல, இறைவனும் எல்லா உயிர்களுக்கும் முதல்வன் ஆகிருன். உயிரோடு கூடிய எல்லா உடம்புகளுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அவனே தலைவன் என்று கூறப்படுகிருன். இறைவன் இயங்கினுல் எல்லாம் இயங்குகின்றன.

உயிர்களோடு கூடியிருப்பதனுல் உயிர்களெல்லாம், ஏனை உயிரெழுத்துக்கள் போன்றவை எனப்படும். பாசத்தோடு சேர்ந்த உயிர்கள் உயிர்மெய் எழுத்துக்களைப் போன்றவை; ஆதலின், எல்லா எழுத்துக்களுக்கும் அகரமே தலைமை என்பது, இறைவன் தலைமைக்கு உவமையாய் வந்தது. இப்படிப் பார்க்கும்போது, இறைவன் என்பவன் ஒருவனே என்பதும், இரண்டாவதாய் எண்ணப்படுபவை எல்லாம் உயிர்களே என்பதும் பெறப்படும்.

பாட்டின் சொற்பொருள் வருமாறு: ஒன்றென்றது ஒன்றே காண் - ஒன்றென்று வழக்கிற் கூறப்படுவது 'கடவுள் ஒருவன்' என்பதே; ஒன்றே பதி - ஆதலால் பதி எனப்படுபவன் ஒருவனே; பசுவாம் ஒன்று என்ற நீ - பசுவாகிய பொருள் என்று சொல்லப்பட்ட நீ; பாசத்தோடு உளை காண் - பாசத்தோடு உள்ளனை கண்டுகொள்க.

ஒன்று இன்று - (கடவுள் இயக்கம் இல்லையென்றால்) ஒரு பொருளும் இல்லை; அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல் - அகரவுயிரின் இயக்கம் இல்லையென்றால் மற்ற எழுத்துக்களும் இல்லையாகும்; ஆல் - ஆதலால், இக் கிரமத்து - இம் முறைமையினால், இருக்கு என்னும் - மறைமொழி 'ஒன்றின்று' என்று கூறும்.

(ஆதலால், கடவுள் உயிர் என்னும் இரண்டும் அறிவுப் பொருள்களேயாயினும் நீ கடவுளாகமாட்டாய்; கடவுள் இயற்கையாகவே பேரறிவும் முற்றறிவும் உடையது, உயிராகிய நீ இயல்பாகவே சிற்றறிவுடையை; அச் சிற்றறிவும் பாசங்களோடு கட்டுப்பட்டிருப்பதனால் மறைபட்டுக், கடவுளருளால், சிறிது சிறிதாக அறிவிக்க அறிந்துகொள்ளும் செயற்கையறிவு உடையையாயிருக்கின்றனை.

கடவுளாகிய அவ்வொன்று இல்லையென்றால் வேறு எப் பொருளும் இல்லையென்றே, சொல்லவேண்டும். எதுபோல என்றால், அகர உயிர் இல்லையென்றால் ஏனை எழுத்துக்களும் இல்லையாதல் போல் என்பது, இம் முறைமையில் மறைமொழி இவ்வாறு கூறும்.)

இருவகை வழக்கிலும் வந்தமையால், கலந்திருக்கும்போது ஒரு பொருளே என்று சொல்லுவதில் தவறில்லை என்றே தெரிகிறது; ஆனால் அவை ஒன்றல்ல; கலப்பினால் மட்டும் ஒன்றென்று தோன்றுகின்றன.

பசுவாம் ஒன்று என்பது, 'உயிரென்று ஒரு பொருளாகக் கொள்ளப்பட்ட நீ' என்னும் கருத்தில் வந்தது; ஒன்று - ஒரு பொருளாக; உளை - உள்ளாய்; காண் - கண்டு கொள்க; 'ஒன்றே பதி காண்' என்று 'காண்' என்பதைப் 'பதி' என்பதோடும் கூட்டிக் கொள்ளலாம்.

'அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல்' என்பது உவமை; 'ஒன்று இன்று' என்பதற்குக் 'கடவுள் இல்லையென்றால், உலகத்தில் ஒரு பொருளும் இல்லை' என்று உரைத்துக் கொள்க. உவமையால் பெறப்படும் பொருள் இது;

இன்ருல் என்பதில் வரும் 'ஆல்' என்பது, 'ஆதலால்' எனப் பொருள் தந்தது. 'இக் கிரமத்தால் கூறும் இருக்கு' என்று முடித்துக் கொள்க.

கிரமம், முறை; கிரமத்து, ஆல் உருபு தொக்கது; சாரியை நின்றது; இருக்கு – மறைமொழி; கிரமம் என்பது 'அகர உயிர் இல்லாமல் ஏனை எழுத்துக்கள் இல்லையாதலின் ஒன்று இன்று' என்னும் முறைமையை நினைந்தது.

இச் செய்யுள், 'தானேயாய்' என்பதற்கு எடுத்துக்காட்டாய் வந்தது. ஏனை எழுத்துக்களுக்கு அகர உயிர் வேறு; அதுபோல உயிர்களுக்கெல்லாம் கடவுள் வேறு; எழுத்துக்கள், 'அகர உயிர்' ஆகமாட்டா, உயிர்களும் கடவுள் ஆகா. ஆதலால், கடவுள் ஒரே பொருளாய் உயிர்களுக்கு வேறு என வந்தது. காரணம், உயிர்கள் பாசத்தோடு உள்ளன; கடவுளோ பாசம் பிணிக்காத முற்றறிவு உடையவர்; பேரறிவு உடையவராதலால்; பாசங்கள் அவரறிவைப் பிணிக்க மாட்டாவாயின.

கடவுள் மற்றவற்றேடு இரண்டறக் கலந்திருப்பதனுல் அவன் இல்லாமல் ஒரு பொருளும் இல்லை எனப்பட்டது.

'தானேயாய்' என்னும் இரண்டற்ற கலப்புக்கு 'அக்கரங்கள் இன்ரும் அகர உயிர் இன்றேல்' என்னும் உவமை இவ்வாறெல்லாம், பொருளுணர்த்துங் கருத்தில், வந்தது.

ஆக இச் செய்யுளில் வந்த குறிப்புக்கள்: (1) மறைமொழி ஒன்றே என்றது, கடவுள் ஒருவனே என்னும் பொருட்டு; (2) கடவுள் உயிர்களோடு கலந்திருந்தாலும், பாசம் பற்ற மாட்டாமையால் கடவுள் தனிப்பட்டவர்; 'வேருய்' என்னும் கலப்புக்கு இங்ஙனங் காரணமும் கூறியது. (3) ஆயினும், கருணையால் கடவுள் உயிர்களோடும் பொருள்களோடும் கலந்திருத்தலால், 'அவனன்றி ஓரணு'வும் இல்லை; அகர உயிர் இல்லாவிட்டால் ஏனை எழுத்துக்களும் இல்லாதது போல.

இவ்வாறு மூன்று கருத்துக்களையும் மறைமொழி முறையாகக் கூறியது.

முன் செய்யுளில், உடலும் உயிரும் போல் என 'அவையேயாய்' என்னும் கலப்புக்கு உவமம் வந்தது; அப் பெருமானது வேறுபட்ட திறத்துக்கும் இயைபுக்கும் அகரவுயிரும், உயிர்களின் நிலைமைக்கு எழுத்துக்களும், இச் செய்யுளில்' 'தானேயாய்' என்பதற்கு உவமையாய் வந்தன; அடுத்த செய்யுளில், 'உடனுய்' என்னும் கலப்புக்கு, உயிர்களிலும் உடம்பிலும் ஏனைப் பொருள்

களிலும் அம்மை இடத்தும் இறைவன் கலந்திருக்கும் நிலை 'எங்கும் அத்துவிதம் ஆம்' என்று கூறிக்கொண்டு அதற்குப் 'பண் ஓசை, பழச் சுவை'கள் உவமைகளாய் வந்தன.

அவையே தானேயாய்:

இனி, 'உடனுய்' என்னும் கலப்புக்கு வரும் மூன்ருவது செய்யுள் :

''பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவித மாதல்; அருமறைகள் ஒன்றென்னுது
அத்துவிதம் என்றறையும் ஆங்கு''

என்பது.

பொருள்: பண்ணையும் ஓசையும் போல-பாட்டும் அதனோடு கலந்திருக்கும் இசையும் போலவும்; பழமதுவும் எண்ணுஞ் சுவையும் போல்—பழமும் அதனோடு இரண்டறக் கலந்திருக்கும் எண்ணப்படும் சுவையும் போலவும்; எங்கும் ஆம்—உயிர்களிலும் மற்றவைகளிலும் எங்கும் உடனுய்க் கலந்திருப்பதாகிய; அண்ணல் தாள்—பெருமானும் அதன் சத்தியும்; அத்துவித மாதல்—இரண்டறக் கலந்திருத்தலால்; அருமறைகள்—அரிய மறைமொழிகள்; ஒன்று என்னுது—கலப்பை மட்டும் நோக்கி எல்லாம் ஒரு பொருள் என்றே சொல்லி விடா; ஆங்கு—அந்நிலையில்; அத்துவிதம் என்று அறையும்—பொருள் வேறு பாட்டையும் கருதி, அச் சொல்லில் இருவகைகள் தெரிதலையும் அவை காரியப்பாட்டுக்காக உடனுதலையும் சிறப்பாக நினைந்து, அக் கலப்பை, 'இரண்டன்மை' என்று கூறும்.

எண்ணும் சுவை—எண்ணப்படும் சுவை; 'கருதப்படும் சுவை' என்க; பண் - பாட்டு; பண்ணை என ஐகாரம் சேர்ந்திருக்கிறது; அதனை இரண்டனுருபாகவும் கொள்ளலாம்; இதற்கேற்றபடி ஓசையையும் என உருபு விரித்துக் கொள்வது நன்று; 'பகுதிப் பொருள் விகுதி' யென்ருல், அவ் விகுதிக்குத் தனிப்பொருள் இல்லை. சிவஞானபோதம் சுருங்கிய நூலாதலின் அதனிற் பொருளில்லாமல் எவையும் வருவதில்லை.

'பாட்டும் ஓசையும்' என்னும் உவமையில், பாட்டு என்பது, எழுத்துக்களின் வடிவில் தெரிகிறது. ஓசை கண்ணுக்குப் புலப்படுவதில்லை, செவிக்குக் கேட்கும். 'பழமும் சுவையும்' என்னும் உவமையில், பழம் கண்ணுக்குத் தெரிகிறது; சுவையை நாக்கு அறியும். பாட்டும் பழமும், இவ்வாற்ருல் கலையையும் பொருளையும் உணர்த்தும்.

கலைகள், கடவுளருளால் உயிரறிவின் திறனாய் விளங்குவன. ஆதலால், முறையே அவை உயிர்களையும் பொருள்களையும் உணர்த்தின. எங்கும் என்பதற்கு அதனால் உயிர்ப் பொருள்களும் உயிரல் பொருள்களும் என்று உரை கூறிக் கொள்வது பொருந்தும். இரண்டு உவமைகள் வந்ததற்கு இயைபு இது! ஆம்—கலப்பதாகிய; அவ்வாறு இறைவன் ஒன்றுமாய், வேறுமாய், உடனுமாய் இரண்டறக் கலப்பான் என்று கூறியபடி.

பாட்டோடு இசை கலக்கும்போது அப் பாட்டுக் காரியப்படுகிறது. பழத்தில் சுவை மிகும்போதும் அது பயன்படுதலாகிய காரியத்துக்கு உதவுகிறது. ஆதலால், இவ்விரண்டும் 'அவையே தானேயாதல்' என, உடனாய்க் கலத்தற்கு உவமைகளாய் வந்தன.

பண்ணையும் பழத்தையும் நோக்கும்போது அவற்றின் இனிமையை நுகரவே அவாவுதல் போல, உலகுயிர்களை நோக்கும்போது அவற்றிற் கலந்திருக்கும் அருளினிமையை நுகரவே அவாவுதல் வேண்டும்; உலகத்தைக் காணும்போதெல்லாம் கடவுட் சுவையிற் கருத்திருந்தால்மட்டுமே அடியாராகலாம்; கடவுளுக்கு அன்பராகலாம்; 'என் பொல்லா மணியைப் புணர்ந்தே' என்றார் மாணிக்கவாசகர்!

இதற்கு, ஒன்றாய் வேறாய் உடனாய் என்னும் இம் மூவகை 'அத்துவிதக்' கலப்புகளுள், பெருமான் தன் அம்மையுடன் மிகு நுட்பமாய் இரண்டறக் கலந்திருத்தல் இன்றியமையாததாகிறது. ஒன்றுபோற் கலந்திருக்கும் இயைபை ஒன்றென்று கொள்வதில்லை; 'இரண்டன்மை' என்று மறை கூறுகின்றது. 'அண்ணல்' என்று மட்டுங் கூறாமல், 'அண்ணல் தாள் அத்துவித மாதல்' என்று கூறினமையால், அண்ணலும் தாளும் அத்துவிதமாதல் எனவும் வேறொரு கருத்தை உணர்வதற்கு வாயிலாக உள்ளது.

நூற்பாவில், 'ஆணை என்னும் அம்மை'யுடன் 'நீக்கமின்றி நிற்றலும்' ஒரு கருத்தாக வந்தது. எடுத்துக்காட்டு வெண்பாவிலும் அக் கருத்து வெளிப்படுதல் இன்றியமையாதது. காரியப்பாட்டோடு உடனாய் நிற்றல் என்னும் இயைபுக்கு, உயிர்களோடும் பாசங்களோடும் கடவுள் கலப்புற்று நிற்றலை விட, அவன் தன் அம்மையோடு இரண்டற இயைந்து நிற்றல் முதன்மையும் சிறப்புமாக இருக்கிறது. அண்ணலும் தாளும் உடனாய் நிற்றலை ஈதுணர்த்தும். ஆதலால், 'தாளோடு அண்ணல் அத்துவிதம்' என்னும் இயைபையும் சிறப்பாகச் சேர்த்து, 'அண்ணல் தாள் அத்துவிதம்' எனப்பட்டது.

தாள் என்பது முயற்சி; அது காரிய முயற்சியைக் காட்டும். அதாவது, 'அருள்' என்றும் 'அம்மை' என்றும் சொல்லப்படும் உலக ஐந்தொழில் முயற்சிகள் ; தாள் என்பதைத் திருவடி என்று கொண்டாலும், அதுவும், காரியப்பாட்டோடு உடனுய்க் கலக்கும் அருளுக்கே அடையாளமாகும் ; 'திருவடி நெறி' என்பது 'அருள் நெறியே' ; 'அம்மை நெறி' என்பதும் இதனையே உணர்த்தும். இறைவனுடைய நெறிகள் பொது வாகச் 'சமயநெறிகள்' எனப்படும். சில சமயநெறிகள் படிப் படியாக, எல்லாம் வல்ல முதல்வனது திருவடி நிலையில் உய்க்கு மானல், அவை 'வீடுபேற்று நெறி' எனப்படும் ; அது, 'சன் மார்க்கம்.' சன்மார்க்கம் என்பதும் ஒரு மார்க்கமே. 'சத் மார்க்கம்' ஆதலால், சத்தாகிய முதல்வனிடத்தில் அது கொண்டு போய்விடும். 'மார்க்கம் அல்லாத மேல்நிலை ஒன்றும் உண்டு. அதுதான் அப்பனது பேரின்ப நிலை ; சன்மார்க்கத் துக்கு மேல் நிலையாக விளங்குதலால், அதனைச் சன்மார்க்கத் துக்கும் மேல் என்பது மரபு.

சைவசமயம் அவ்வாறு மேல்நிலையில், சமயநெறிகளுள் ஒன் ருகவும் சமயங் கடந்த பேரின்பத் துறையாகவும் விளங்குகிறது. வீடுபேற்று நிலை என்பது, அருள் அல்லது அம்மை நிலை. மலங் களின் விடுதலையை 'வீடு பேறு' என்பர். சிவஞானபோதத்தின் பத்தாம் நூற்பாவில் அது குறிக்கப்படும். அங்ஙனம் மலங்கள் விடுதலையானபின் அப்பன் நிலையை உயிர்கள் எய்தவேண்டும். அது, 'பேரின்ப நிலை' எனப்படும். அம்மையப்பர் இவ்வாறு உயிர்களுக்கு அருள் நிலையாகிய விடுதலை நிலையையும் அதனுல் பேரின்ப நிலையையும் பயப்பர்.

ஒரு கடவுளே தம்முள் அம்மையும் அப்பனுமாய் இரு பொருளாய் இருப்பர். ஆயினும் ஒரு பொருளே என்னும்படி ஒன்ருய்க் கலந்திருப்பர். அக்கலப்பில் ஒன்ருய் வேருய் உடனுய் என்னும் கலப்புகள் காணப்படுவதனுல், அஃது, இரண்டற்ற கலப்பாய் இருக்கிறது ; அக் கலப்பில், அம்மையப்பர் ஒன்ருகவும், அம்மையப்பர் வேருகவும், காரியப்பாட்டில் உடனுகவும் ஒன்று கலந்திருப்பர். ஒன்ருய் வேருய் உடனுய் என்னும் மூவகைக் கலப்பில் முதலிரண்டும் காரியப்பா டாகமாட்டா. உடனுய்க்கலந் திருத்தலே காரியப்பாடு ; சிறப்பு! உயிர்களிலும் உயிரல் பொருள்களிலுமாக அப்படி எல்லாவற்ருேடும் உடனுய்க் கலந் திருப்பான் ; அம்மையோடும் உடனுய்க் கலந்து அம்மையின் பணிகளுக்கு ஆக்கம் தருவான்.

'வேருய்' என்பதனுல் அம்மையும் அப்பனுமே தனித்தனி முதல்கள் என்பதும், 'ஒன்ருய்' என்பதனுல் எப்போதும் அவ் விரு முதல்களும் ஒன்ருகவே கலந்திருக்கும் என்பதும், 'உடனுய்' என்பதனுல் அவ்விரு முதல்களும் காரியங்களில் ஒரே நோக்க மாய் இருக்கும் என்பதும் பெறப்படும்.

அம்மை உலகை நோக்காமல் அப்பனேடு கலந்திருக்கும் போது 'ஞானம்' எனவும், உலகை நோக்கியபோது 'அருள்' எனவும் பெயர் பெறுவார்.

'அருள் நெறி' என்பது, உலகுயிர்களை நோக்கி உயிர்கள் முன்னேறும் வகையில் அருள் செலுத்துவது; இதனை உயி ரிரக்கம் (சீவகாருணியம்) என்று பெரியோர் வழங்குவர். தெய்வத் திருவள்ளுவனுரும், 'அருளுடைமை' என்று ஓர் அதி காரத்தை நிறுவி, அதனைப் பெரும்பாலும் உயிர்களிடம் இரக்கங் கொள்ளும் அருள் நெறியாக இனிது விளக்கினுர்.

''மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு'' என்னுந் திருக் குறளில் (அருளுடைமை, 4), 'மன்னுயிர்' எனப் பொதுவாக உயிர்கள் குறிக்கப்படுதல் காண்க.

இவ்வாற்ருல், அம்மையும் அப்பனும் தம்முள் இரண்டறக் கலந்திருத்தல் இனிது பெறப்படுதலின், 'அண்ணல் தாள் அத்துவிதம்' என்று செய்யுளில் வந்தது.

வேளாண்மை கொள்வதற்கு முன் தாளாண்மை பெற் றிருத்தல் முதன்மை; இறைவன், தாளாண்மையையே முதன் மையாகக் கொண்டிருத்தல் 'அண்ணல் தாள்' என்பதனுல் தெரிகிறது.

உலகியலோடு அம்மை கலந்து முயற்சியுடையவரா யிருக் கிருர். ஆதலால், அம்மைக்குத் 'தாள்' கூறப்பட்டது.

உலகத்தில் மாதர்களே பணி மிகுதி உடையவர்கள். அவர்கள் உடம்பும் அதற்கேற்றபடியே குனியவும் நிமிரவும் மென்மை உடையதாய் இயைபுற்றிருக்கிறது. மென்மையின் மறைபொருளாகிய நுண்பொருள்களுள் இதுவும் ஒன்று!

உலகத்தில் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய்க் காணப் படுகின்றன. உயிர்களில் மட்டும் அவை அடையாளமாய் இருப்பதனுல், அறிவு உடைய உயிர்கள் என்ருல் அவை ஆண் பெண்ணுக அமைதல் இயல்பாயிருக்கிறது.

ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்கள் வரையிலும், அதற்கு மேல் தேவர்களிலும், அவர்களுக்கும் மேல் அதிதேவர்களிலும், அவர்களுக்கும் மேல் எல்லாம் வல்ல பேரறிவுப் பெருமானாகிய இறைவன்மாட்டும், ஆண் பெண் அமைப்பைக் காண்கிறோம். அப்படிக் காண்பதோடு, பெரும்பாலும் ஓர் ஆணுக்கு ஒரு பெண் என்னும் வகையில் இயைந்திருப்பதையும் காண்கிறோம்.

ஆடவர் ஒருவருக்குப் பெண்கள் இருவர் அல்லது பலர் இயைவதையோ, பெண் ஒருத்திக்கு ஆடவர் இருவர் அல்லது பலர் இயைவதையோ உலகம் தகுதியாக ஒப்புக்கொள்வதில்லை. ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணின் இயைபு என்பதே இயல்பானதாய் இருக்கிறது. உலகு முழுதும் மக்கள் தொகையைக் கணக்கிட்டால், ஏறக்குறைய இவ்வியல்புக்கே ஒத்திருக்கிறது. ஆண்களுக்குப் பெண்கள் ஏறக்குறையச் சரிபாதியாய் இருக்கின்றனர். ஆதலால், ஆடவர் ஒருவருக்குப் பெண்கள் பலரின் இயைபு கணக்கிடுவதற்கில்லை.

ஓர் ஆணுக்கு ஒரு பெண் என்னும் இயற்கை நெறிமுறைப்படி, சிவபெருமான் உமையம்மை ஒருவரையே உடன் கலந்திருக்கிறார். சிவத்தை வழிபடும் சைவர் என்போர் கடமையும் அதுவே. சைவருள் எவரேனும் ஒரு மாதுக்குமேல் மற்றொருவரை உடையவரானாலும், அவர் சைவர் ஆகார். மாதர்களும் அவ்வாறே. சைவப் பெண்களின் முறைமை இது.

வாழ்க்கையில் ஒரே மாது, இல்லத்தில் ஒரு வகையாகவும் புறத்தில் ஒரு வகையாகவும் நடந்துகொள்ளும் இருவகை நிலைகள் உண்டு. அதனால் முருகன் திருமால் முதலிய சிலர்க்கு, அவ்விருவகைத் தோற்றத்தையும் இரு மாதராக உருவகப்படுத்தி வழங்குவர். மற்றப்படி, ஓர் ஆண் உயிர்க்கு ஒரு பெண் உயிரே உரியதாய் இருக்கிறது. அதனாலேயே மனைமாட்சியில், 'உரிமை' என்றும் மனைவிக்குப் பெயர் அமைந்தது.

ஆண்பால் பெண்பால் இயைபு, ஒரு பிறவியோடு தீர்வதன்று. குறிப்பிட்ட ஆணும் பெண்ணும் எல்லாப் பிறவிகளுக்கும் உரியவர்கள். இயல்பிலேயே உயிர்கள் ஆண் பெண் எனத் தம்முள் உரிமையுடையவராய் இரட்டை இரட்டையாய் உள்ளனர். பிறவிக்கு வரும்போது, ஒரு விதை முளைவிடும் போது இரட்டை இலைவிட்டுத் தோற்றுவதுபோல் வேறு வேறு உடலெடுத்துப் பிரிந்து தோற்றுகின்றனர். ஆயினும் ஏதோ ஒரு வகையில் அவ் விரண்டு உயிர்களும் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் சேர்க்கையைப் பழைய நூல்கள் 'காதல்' என்று கூறுகின்றன.

ஓர் ஆண் உயிர்க்கு உரிய பெண் உயிர் ஒரு பிறவியில் சற்றுக் காலம் தாழ்த்தும் அமையலாம்; அடியோடு கிடைக்காமலும் போகலாம். தனக்கே உரிய உயிர் காதலாற் கிடைக்கும் வரையில் வேறு திருமணம் செய்து கொள்ளாமலே இருவரும் இருப்பர்; வேறு செய்து கொள்ளுதல் 'திருமணம்' என்னும் பெயர்க்குப் பொருந்தவில்லை. இயற்கையில் அவர்களிடம் ஆண்மை பெண்மை மணம் வீசா; குற்றமாகிய காமந் தான் தோன்றும்; பலர்க்குத் தெரியத் திருமணச் சடங்கு நிகழ்ந்தாலும் கற்பைப் பலர் அறிய விலைக்கு விற்ற செய்கையே.

ஒரு பிறவியில், உரிய மாதரோ ஆடவரோ அடியோடு கிடைக்கா விட்டால், அத்தகையவர், அப் பிறவியில் திருமணமின்றியே இருப்பர். அவர்களை யெல்லாம் துறவிகள் என்று நினைத்துவிடக் கூடாது. துறவு கோலங் கொண்டாலும் அவர்கள் துறவியராகார். அகப்பற்றுத் தீர்ந்து, ஒருவரை ஒருவர் பிரியாமலே, வீடு வாசல்களை நீங்காமலே, துறவியர் ஆகலாம்; ஞானமும் பெறலாம்; வீடுங் கூடலாம்; பேரின்பமும் எய்தலாம். இருவரும் பிறவியில், ஒரு காலத்தில் ஒருங்கு சேர்ந்து இயற்கை முறைப்படி, ஒன்ருகவே திருவடி கூடுவர்.

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சு நேர்பவளே" (குறுந். 49)

என்பதும்,

"ஏனை யுலகத்தும் இயைவதால் நமக்கு" (குறிஞ்சி 23)

என்பதும் பழந் தமிழ்ச் செய்யுள்.

"சென்று சென்று பிறப்பான் அடுப்பினும்
பின்னுந் துன்னத் தகும் பெற்றியர்"

என்பது திருச்சிற்றம்பலக் கோவையார் (205).

இவ்வாற்ருல், ஆண் பெண் அல்லது அப்பன் அம்மை இருவரும் தமக்குள் 'அத்துவித'க் கலப்புடையவரே என்பதில் ஐயமில்லை. அதிலும், 'உடனுய்' என்பதற்கு இக் கலப்பு மிகச் சிறப்பு!

'உடனுய்' என்னும் இயைபு, குண குணிகள் இயைபைப் போன்றதன்று; இரண்டும் இரு வேறு முதல்களே; சிவஞான முனிவர், 'ஒப்புமை மாத்திரை பற்றிக் குண குணிகளை உவமை கூறினுர்' என்று விளக்குவது இங்கே கருத்திருத்துதற் குரியது. சிவஞான சித்தியாரில், 'ஒத்தொவ்வா ஆனும்

பெண்ணும் உயர் குண குணிகளாகி' என்று வந்ததும், உவமைக்காக வந்ததேயன்றி வேறில்லை; அம்மையும் அப்பனும், தன்மையும் பொருளும் போல இயைபுடையவர் அல்லர். அப்பன் பொருளும் அம்மை தன்மையும் அல்லர் !

இனி, ஒன்ருய் வேருய் உடனுய் என்னும் மூவகை அத்துவிதக் கலப்புக்கும் ஒரே எடுத்துக் காட்டுச் செய்யுள் சேர்ந்து வருகின்றது.

"அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று — பிரிப்பின்றித்
தானே உலகாம் தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று"

என்பது.

இதன் பொருள் : உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக் கற்போல் - அரக்கை உருக்கிச் சேர்த்து அணைக்கப்பட்ட அந்தக் கற்பொடி போல; உடங்கியைந்து-ஒன்ருய்ப் பொருந்தி, நின்று - வேருய்த் தன் ஆற்றல் தோன்ற வேறுபட்டு விளங்கியிருந்து; பிரிப்பின்றி - பிரிதல் இல்லாமல் உடனுகி விளங்கித், தானே உலகாம் - இறைவன் உலகத்தோடு அத்துவிதமாய்க் கலந்திருப்பான்; தமியேன் உளம் புகுதல் - தேனித்தலின் காரணமாக மலத்தினின்று விடுதலை பெற்றுத் தனியாய் நிற்கும் அடியேன் உள்ளத்தில் வேறின்றிப் புகுதலால்; இன்று, யானே உலகு என்பன் - இத்தகைய வீடு பேற்றுக் காலத்தில், எல்லா உலகுயிரும் யானே ஆயினேன் என்று சொல்லுவேன்.

இச் செய்யுள் மூவகையாய் நிற்கும் அத்துவிதக் கலப்பை உணர்த்துதற்கு அரக்கொடு சேர்ந்த கற்பொடியை உவமையாக எடுத்துக் கொண்டது. அரக்கொடு சேர்ந்த கற்பொடி, சேர்க்கையில் ஒன்ருய்த் தெரிகிறது; கற்பொடியின் சிறப்புத் தோன்ற அரக்குக்கு வேருகவும் விளங்குகிறது; காரியத்துக்குப் பிரிப்பின்றி, உடனுய் நிற்றல் பயன் செய்கிறது. இம் மூவகைக் கலப்பையும் இவ்வுவமை உணர்த்துதலால் 'உடங்கியைந்து' எனவும், 'நின்று' எனவும், 'பிரிப்பின்றி' எனவும் வந்தன.

சேர்த்தி - சேர்த்து; அக் கற்போல் என்னும் அகரம், 'முன்பே தெரிந்தது' என்னும் சுட்டு; இதனை 'முன்னறி சுட்டு' என்றும் சொல்வதுண்டு. கல் - கற்பொடியை உணர்த்திற்று. கல் என்பது ஒன்பது வகையான மணிக் கற்கள். தமியேன், தனியேன் என்னும் பொருட்டு; மலங்களிலிருந்து பற்று நீங்கித் 'தனித்தவன்' என்னும் கருத்தில் வந்தது.

இதற்கு, மலம் வேறோரிடத்தில் நீங்கி இருப்பதாகக் கருத்தன்று, கலந்திருந்தாலும் முன்போற் 'பற்றுதல் இல்லை' என்பது கருத்து.

"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தா ணுவினோ டத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ?"

என்றார் தாயுமானவர். 'புகுதல்' புகுதலால் என்று உருபு விரித்துக் கொள்க. இறைவனோடு இரண்டறக் கலந்தமையால், இறைவனோடு எல்லாவற்றிலும் உயிர் கலத்தலும், அதனால் 'யானே உலகென்பன்' என்றலும் இயல்பு.

ஒன்றாய் வேறாய் உடனாய் என்னும் 'அத்துவிதக்' கலப்பு மூன்றிலும், காரிய நோக்கில் உடனாய் நிற்றல் சிறப்பாதலின், இறைவன் தமியேன் உளம் புகுதலால் யான் இறைவனே யாகி, 'யானே உலகென்பன்' என்று முகமனாகக் கூறியபடி.

முன் இரண்டடிகளில் அம்மூவகைக் கலப்பும் ஒருங்கே உடைய 'அரக்கொடு சேர்ந்த கற்பொடி' உவமையாய் வந்தது. பின் இரண்டு அடிகள் அம் மூவகைக் கலப்புக்கும் அப்பாற் பட்ட மேன்மை, 'அத்துவிதக்' கலப்பில் விளங்குதலும், புலப் படுத்தின. வீடுபேற்றுக் காலத்திற் பேரின்பமடையும் அப்பன் நிலை இம் மேலாம் பகுதியை உணர்த்தும்.

ஒரு பொருளே மூவகைக் கலப்பை உடையதாதல் எங்ஙனம் என்னும் வினாவிற்குக் 'கட்டும் உறுப்பும்' என்னும் முதற் செய்யுள் 'ஒன்றாய்' என்பதற்கு விடையாய் வந்தது.

மறைகள் 'ஒன்று' என்று கூறுவதன் கருத்து, 'கடவுள் ஒருவரே' என்பது. இவ்வாறு விளக்கி, எல்லாவற்றிற்குங் கடவுள் இன்றியமையாதவராய் இருப்பதாலும், ஒரே பொருளா யிருப்பதாலும், வேறானவர் என்று புலப்படுத்தும் பொருட்டு, 'ஒன்றென்றது ஒன்றே காண்' என்றார். இச் செய்யுள், 'வேறாய்' என்னுங் கலப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உலகங்களிலும் உயிர்களிலும் இறைவன் கலப்பு ஒன்றாய் வேறாய் இருத்தலோடு, செயல் நோக்கமாகவும் ஒத்திருத் தலின், 'உடனாய்' என்னும் கலப்புக்குப் 'பண்ணையும் ஓசையும்' என்னும் செய்யுள் கூறப்பட்டது.

உடனாய்க் கலக்கும் இக் கலப்புக்கு, அம்மையப்பர் கலப்பு, மிகு நுட்பமும் மிகு சிறப்பும் உடையதாதலின், 'அண்ணலும் அம்மையும் அத்துவிதம்' என்னும் கருத்துக்கு ஏற்றபடி, வாக்கு எழுந்தது.

இம் மூவகைக் கலப்பும் ஒருங்கே உடையதான ஓர் உவமையை விளக்கி, அம் மூவகைக் கலப்புக்கும் அப்பாற் பட்டதாய், மேலானதாய், நுண்ணியதாய், 'அத்துவிதக் கலப்பு' விளங்குவதையும், அஃது அதன் நுட்ப இலக்கணமாய் இருத்தலையும், அம்மையப்பர் இயைபு கொண்டு எடுத்துக் காட்டினர். 'ஒருங்கு கலத்தலிலேதான் அத்துவிதக் கலப்பின் உண்மை தெரியும்' என்னும் பொருட்டும், 'அரக்கொடு சேர்த்தி' என்னும் கடைசிச் செய்யுள், 'தமியேன் உளம் புகுத லால் யானே உலகென்பன்' என்னும் ஒரு விளக்கத்தோடு வந்தது.

தமியேன் உளம்புகுதலால் அஃதாவது புகுந்து உடனாய் நிற்றலால் கடவுள் வண்ணமாய் விட்ட யான் கடவுளைப்போல் 'யானே உலகென்பன்' என்று மிகு நுட்ப மேல்நிலையையும் புலப்படுத்தியது. வீடுபேற்று நிலையில் இறைவனோடு 'அத்து வித' மாதல் சிறப்பு! 'இன்று' என்றார், மேல் நிலையின் சிறப்புத் தெளிதற்கு; மூவகைக் கலப்புக்கும் அப்பாற்பட்ட மேல் நிலைக்கு இது சான்று.

சிவஞானபோதத்தின் இரண்டாவது நூற்பாவின் முத லாவது பிரிவு, 'அத்துவிதக்' கலப்பின் மாட்சிகளை இங்ஙனம் இனிது உணர்த்துவதாக உள்ளது; அம்மையப்பர் நிலை குண குணித் தொடர்பு அன்று என்பதும் தெரிவித்தது; 'அத்து விதத்'தின் மிகு நுட்பச் சிறப்புக்கு அம்மையப்பர் கலப்பே முதன்மையானது என்பதும் இதுகொண்டு அறிந்து கொள்ளக் கூடும். (தொடரும்)

பொதுவான அடையாளம்

சிவபிரான் திருக்கோயில்களில் நிறுத்தப்பட்டிருக்கும் சிவ லிங்க வடிவானது ஒளிவடிவாய் விளங்கும் இறைவனது நிலையை உணர்த்துவதாகும். இவ்வடிவு எல்லாச் சமயத்தா ராலும் வழுத்தி வழிபடுதற்குரிய பொதுவான அடையாளமாய் உலகமெங்கும் உள்ளதாகும். எந்தச் சமயத்தாரேனும் எந்தச் சாதியாரேனும் இதனை வணங்குவதற்கு விரும்பிக் கோயிலுள் வருவார்களாயின் அவர்களைத் தடைசெய்யாமல் வந்து வணங்கு தற்கு இடங் கொடுத்தல் வேண்டும்.

—மறைமலையடிகள்

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எசி.]

(பரல் எ பக்கம் ௩௫0 இன் தொடர்ச்சி)

சங்ககாலத்தில் உரோம நாட்டுக்கருகில் இருந்த கடலில் எடுக்கப்பட்ட பவளமே பெரும்பாலும் தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பவளத்தை இந்தியர் மிகவும் போற்றியதாக அக்காலத்தில் வெளிநாட்டு ஆசிரியர் எழுதியுள்ளனர். பெரிப்புளூஸ் எழுதிய நூலில் நன்கு சிவந்த பவளம் நடுக்கடலில் இருந்து எடுக்கப்பட்டுத் தமிழ்நாட்டுத் துறைமுகங்களான முசிறிக்கும் தொண்டிக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கூறியுள்ளார். இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பவளம் மிகுதியாக இருந்ததால் பவளம் விளையும் இடத்திலேயே பவளம் கிடைப்பது அரிதாகி விட்டது என்று எழுதியுள்ளார். ஆனால், மேலைநாட்டில் இந்தியாவில் மதிக்கப்பட்ட அளவு பவளம் ஒரு சிறந்த மணியாகக் கருதப்படவில்லை. பொன்னையும் பவளத்தையும் முத்தையும் மணியையும் ஒரே நன்கலத்தில் அமைத்ததாக ஒரு பாடல் கூறியுள்ளது. மகளிரின் சிறந்த மேனியைத் 'துகிர் மேனி' என்று பட்டினப்பாலை கூறியுள்ளது. பவளத்தைப்பற்றிச் சங்க நூல்களும் பிற்கால நூல்களும் கூறியுள்ளன.

"ஈயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய" —அகம், 14

"குறுமோட்டு மூதாய் குறுகு றூடி
மணிமண்டு பவளம் போலக் காயா" —அகம், 374

"இனச்சித ருகுத்த விலவத் தாங்கட்
சினைப்பூங் கோங்கி னுண்டாது பகர்நர்
பவளச் செப்பிற் பொன்சொரிந் தன்ன" —அகம், 25

"அலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகிர்பொதி பவள மேய்க்கும்" —ஐங்குறுநூறு, மிகை, 2

இந்திரகோபப் பூச்சியைப் பவளமொடு ஒப்பிட்டுக் கூறுவது சங்கப்பாடல் மரபாகும். மணியும் பவளமும் சேர்ந்த தன்மையைக் காயாவுடன் கூடிய இந்திரகோபத்துடன் ஒப்பிட்டு அகநானூறு கூறியுள்ளது. மணிமண்டு பவளம் என்ற அகநானூற்றுத் தொடரே அகநானூற்று இரண்டாவது தொகுதிக்குப் பெயராக மணிமிடைபவளம் என்று வந்தது. இந்தத் தொடரே பிற்காலத்தில் மணிப்பிரவாளம் என்று வடமொழி விரவிக்கலந்த தமிழ்

நடைக்குப் பெயராக மாறியது. பவளத்தைக் கோவையாகவும் மணியுடனும் முத்துடனும் சேர்த்து அணிகலன்களாக்கிப் பயன் படுத்தினர்.

"பவழஞ் சேர்ந்த பல்கா ழல்குலர்" —பெருங்கதை, 43-146

"செந்துகிர்க் கோவை சென்றேந் தல்கு
லந்துகின் மேகலை யசைந்தன வருந்த"
—சிலம்பு. 4 : 29-30

அல்குலின் மேல் உடுத்திய துகிலில் பவளவடத்தை அணிவது வழக்கமென்று தெரிகின்றது. பவளக்கடிப்பிடை முத்தம் என்று ஓர் அணிகலனைத் திணைமாலை குறிப்பிட்டுள்ளது.

"உடுத்தவை, கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ் மேன்
மையில் செந்துகிர்க் கோவை யவற்றின் மேற்" —கலி, 85

"நுண்டுகி னுழைந்த வல்குற் பவளமொத்து"
—சீவகசிந்தாமணி. 1184

"திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇப்
பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழ மறியாநின் கைபுனை வேழம்" —கலி, 80

"பூண்டவை, எறியா வாளு மெற்று மழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற் றவிர்பூண்" —கலி, 85

சிறுவர்க்கான யானைப் பொம்மையைத் தாங்கிய வட்டப் பலகை பவளத்தால் செய்யப்பட்டிருந்தது. எறியாத வாளும் எற்றாத மழுவும் ஆனேற்றுப் பூணும் சிறுவரின் அணிகலனாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றில் ஆனேற்றுப்பூண் பவளத்தால் செய்யப் பட்டது. பவளத்தால் போதிகைக்குத் திரள்கால் செய்யப் பட்டதாக மணிமேகலை கூறியுள்ளது. காசுமாலையில் பவளக் காசையும் பல மணிகளோடு சேர்த்திருந்ததாகப் பெருங்கதை (இலாவாண காண்டம் 19, 142) கூறியுள்ளது. சங்ககாலத்திலும் பிற்காலத்திலும், மாலைகளிலும் மேகலைகளிலும் பவளத்தை மிகுதியாகப் பயன்படுத்தினரென்று தெரிகின்றது.

சங்க நூல்களில் மிகச் சிறந்த மணிகளில் ஒன்றாக முத்தைக் கருதினர் என்பது தெரிந்ததே. தமிழ்நாட்டு முத்து சங்ககாலத்திலும் இடைக் காலத்திலும் உலகம் முழுவதும் சிறப்புற்றிருந்தது. பாண்டி நாட்டில் கொற்கையில் விளைந்த முத்தைப்பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன. தமிழ்நாட்டில்

இருந்து ஏற்றுமதியான விலையுயர்ந்த பொருள்களில முத்தே முதன்மை வாய்ந்ததாகும். உரோமர்கள் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டு முத்தையே மிகவும் போற்றினர். உரோமப் பேரரசின் அரசிகள் இந்த முத்துகளையே அணிந்து மகிழ்ந்தனர். முத்து மணிகளில் சிறந்ததொன்றாகக் கருதப் படினும் முத்து கடலில் பிறக்கும் மணியாகும். பிற மணிகளைப் போலக் கல்லில் பிறப்பதில்லை. பவளமும் கடலில் பிறப்ப தாயினும் அதைத் தாழ்ந்த மணியாகவே கருதினர். சங்க நூல்களில் வலம்புரிச் சங்கைப் பெறுவதற்காக மூழ்கினதாகக் கூறப்படினும் முத்தைப் பெற மூழ்கினதாகக் கூறப்பெறவில்லை. முத்தைப் பெறுவதற்கு மூழ்கியது சங்ககாலத்தில் எளிய நிகழ்ச்சியாகிவிட்டதால் கூறவில்லை. ஆயினும் கடலின் அடியில் இருந்த மீனைக் கைக்கொள்ள விரும்பிய பரதவர் முத்துச் சிப்பி களையும் கொண்டுவந்தனர் என்பது அகநானூறு 296 ஆம் பாட்டில் விளங்குகின்றது. சங்ககாலத்தில் முத்தை எடுத்தல் என்பது இக் காலத்தைப்போல மிக அரிய நிகழ்ச்சியாகக் கருதப் படவில்லை. அன்றாட நிகழ்ச்சியாகவும் கருதப்பட்டது. சங்க காலத்தில் முத்து மிக மிகுதியாகக் கொற்கைக் கடற்கரையில் கிடைத்ததால் அதற்காகக் குளித்ததைப்பற்றிக் கூறவில்லை. ஆனால், வலம்புரிச் சங்கு சங்ககாலத்திலேயே அரியதாகவும், பெருமை மிக்கதாகவும் கருதப்பட்டதால் வலம்புரிச் சங்கை மூழ்கி எடுப்பது கூறப்பட்டது. வலம்புரிச் சங்கில் கிடைக்கும் முத்திற்கும் ஒரு தனிப் பெருமை ஏற்பட்டது.

"இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை எதிர்கொள இழிதரும்" —அகம், 350

அகநானூறு கூறியுள்ள செய்தியில் சுறாமீனுக்குப் பயந்து வலம்புரிச் சங்குகளை மூழ்கி எடுத்தது கூறப்பட்டுள்ளது. வலம்புரிச் சங்கு எடுப்பதைப்போலவே அக் காலத்தில் முத்துச் சிப்பியையும் எடுத்திருப்பர் என்பதில் ஐயமில்லை. வலம்புரிச் சங்கெடுக்கும் முறையைக் கூறிய அகநானூற்றுச் செய்திக்கும் 13ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ முத்தெடுக்கும் முறை யைப் பற்றிக் கூறிய செய்திக்கும் மிகுந்த ஒற்றுமை உண்டு. முத்தெடுக்கும் தொழில் பாண்டிய அரசரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததை அகநானூறு தெரிவித்துள்ளது.

"மறப்போர்ப் பாண்டிய ரறத்திற் காக்குங்
கொற்கையம் பெருந்துறை முத்தி னன்ன
நகைப்பொலிந் திலங்கு மெயிறுகெழு துவர்வாய்" —அகம், 27

மார்க்கோபோலோ கூறியுள்ள செய்திகளில் நீர்ப்பரப்பில் முத்து எடுப்போர் பாண்டிய அரசனுக்குப் பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. கொற்கையில் முத்துக் குளித்ததை மறப்போர்ப் பாண்டியர் அறத்தில் காத்ததாக அகநானூறு கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். முத்துக் குளித்தலைப் பாதுகாக்க சங்க காலத்தில் பாண்டியர் ஒரு நிலைப்படையையே கொற்கையில் நிறுத்தி வைத்திருக்க வேண்டும். முத்துக் குளிப்போரை ஊறு செய்யும் பெரிய மீன்களைத் தடுக்க மந்திரம் சொன்ன பிராமணர்களுக்கு இருபதில் ஒரு பங்கு தரப்பட்டதாக மார்க்கோபோலோ கூறியுள்ளார். மந்திரத்தால் கட்டுப்பட்ட மீன்கள் பகல் வேளை வரையில்தான் ஊறு செய்வதில்லை என்றும் இரவில் அவை கட்டுப்படுவதில்லை என்றும் கூறியுள்ளார். இந்தப் பிராமணர்கள் விலங்குகளையும் பறவைகளையும் இவ்வாறு கட்டுப்படுத்தும் திறனுள்ளவர் என்று கூறியுள்ளார். பகலில் சுருமீன்கள் யாரையும் ஊறு செய்வதில்லை என்பது இக்காலத்தில் கண்டறிந்த செய்தியாகும். காலையிலும் மாலையிலும் சுருமீன்கள் மனிதரை எறியும் என்பது இக்காலத்தில் கண்டறிந்ததாகும். இதைச் சங்க காலத்திலும் கூறியுள்ளனர். அகநானூற்றில் 'எறி சுரு நீக்கி' என்று சொல்லி யிருப்பதால் சுரு மீன்களைக் கட்டும் கட்டுவித்தை தெரிந்தோர் சங்க காலத்தில் இருந்தனரென்பது தெளிவாகின்றது. ஆனால், அவர்கள் பிராமணர்களாக இருந்திருக்க முடியாது. மார்க்கோபோலோ தவறுதலாக உள்ளூர்ப் பூசாரிகளைப் புரிந்து கொள்ளாமல் பிராமணர்கள் என்று எழுதியுள்ளார். பிராமணர்கள் இந்தக் கட்டுவித்தையை என்றுமே செய்ததில்லை. சுரு மீன்களைக் கட்டுப்படுத்துவோரைக் 'கடல் கட்டி' என்ற பெயரால் மார்க்கோபோலோ அழைத்துள்ளார். கட்டுவிச்சி போன்ற பழங்குடி மக்களினத்தாரே இந்தக் கட்டுவித்தையில் வல்லவர். கண்கட்டு வித்தையைப்போலக் கடலில் ஊறு செய்த சுருமீன்களைக் கட்டிப் போட்டவர் பிராமணர்களாக இருக்க முடியாது. ஏப்பிரலின் துவக்கத்தில் பெரிய சிறிய படகுகளில் முத்தெடுக்கச் செல்வோர் 'பெத்தலார்' என்ற இடத்திற்குப் போய் அங்கிருந்து 60 கல் தொலைவில் இருந்த மன்னார் சந்தியில் சென்று முத்துக் குளிப்பர் என்று மார்க்கோபோலோ கூறியுள்ளார். பெத்தலார் என்பது இலங்கையில் இருந்த பட்டலம் என்று யூல் என்ற அறிஞர் கூறியுள்ளார். ஆனால், இலங்கைக் கடற்கரைக்கருகில் இருந்த ஊரில் முத்தெடுக்கச் சென்றதாகக் கூறியது பொருத்தமாக இல்லை. இன்றும் தொள்ளாயிரம் பாறை என்று முத்தெடுக்கும் இடம் கூறப்படுகின்றது. முத்

தொள்ளாயிரம் என்ற நூல்கூடத் தொள்ளாயிரம் பாறையில் விளைந்த சிறந்த முத்தைக் குறித்து வழங்கியிருக்கலாம். மூன்று தொள்ளாயிரம் என்பதற்கோ தொள்ளாயிரம் பாடல்கள் இருந்ததற்கோ யாதொரு சான்றும் இல்லை. ஆதலின் தொள்ளாயிரம் பாறையில் விளைந்த சிறந்த முத்துப் போன்ற பாடல்கள் என்ற பொருளில் முத்தொள்ளாயிரம் என்று நூற் பெயர் தோன்றி யிருக்க வேண்டும். அகநானூற்றில் மூன்றும் பகுதிக்கு நித்திலக்கோவை என்று பெயர் இருப்பதையும் இது சார்பாகக் கவனித்துப் பார்க்க வேண்டும். முத்துக்கோவை போன்ற சிறந்த பாடல்கள் என்று கருதினர். ஆதலின் 'பெத்தலார்' என்று மார்க்கோபோலோ கூறுவது முத்தொள் ளாயிரம் என்ற சொல்லின் மாற்றமே என்று கருதலாம். சங்க காலத்தில் வாழ்ந்த பெரிப்புளுசிற்கு அடுத்து முத்துக் குளித்தலைப்பற்றி ஏலியன் (Aelian) என்பவர் எழுதியிருக் கிறார். சோழநாட்டுக் கடற்கரையிலும் முத்துக் குளிக்கப் பட்டதாகக் கூறியுள்ளார். இது சார்பாக ஒரு கதையையும் கூறியுள்ளார். முத்துச்சிப்பிகள் கூட்டம் கூட்டமாகச் செல்லும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. அந்தத் தலைவனை முத்துக் குளிப்போர் பிடித்துவிட்டால் முத்துச் சிப்பிகளின் கூட்டத்தையே பிடித்து விடலாம் என்று அவர் எழுதினர். இஃது ஒரு புராணச் செய்தியே என்பதில் ஐயமில்லை. தேனீக்களில் தாய்த் தேனீயைப் பிடித்தால் தேனீக் கூட்டத்தைப் பிடிக்கலாம் என்பது உண்மையே. ஆனால், முத்துச் சிப்பிகளின் வாழ்வில் அத்தகைய தலைவனோ, அத்தகைய கூட்டு வாழ்க்கையோ கிடையாது என்பது அறிஞர்கள் கண்டதாகும். ஆனால், ஏலியன் கூறிய செய்தி நிகண்டுகளில் வேறு முறையாகக் கூறப்பட்டுள்ளது. இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி என்றும் இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி என்றும் வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சலஞ்சலம் என்றும் சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்சசன்னியம் என்றும் நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்தியைப் போன்றே ஏலியன் கூறிய செய்தியும் உள்ளது. இப்பி என்பது முத்துச்சிப்பியைக் குறிக்கும். முத்துச்சிப்பியும் சங்குகளும் வேறு வேறு இனமாகும். ஆதலின் இப்பி ஆயிரம் சூழ்ந்தால் இடம்புரி ஆவதோ இடம்புரிச் சங்குகள் ஆயிரம் சூழ்ந்தால் வலம்புரி ஆவதோ பொருளற்ற செய்தியாகும். இன்றும் இடம்புரிச் சங்குகள் நிறைய கிடைக்கின்றன. ஆனால், மிக அரிதாக வலம்புரிச் சங்குகள் கிடைக்கின்றன. கூட்டமாக அவை கிடைப்பதில்லை. பாஞ்சசன்னியம் என்பது முற்றிலும் புராணச் செய்தியாகும். இந்தச் செய்திகளில்

முத்துச் சிப்பிகள் கூட்டமாகக் காணப்பட்டன என்பதே உண்மையானதாகும். கொற்கை யருகில் முத்துக் குளித்த செய்தியைச் சங்கநூற் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன.

''இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை'' —அகம், 130

''தோளா முத்தின் தெண்கடல் பொருநன்
திண்தேர்ச் செழியன் பொருப்பின் கவாஅன்'' —அகம், 137

''யாத்த தூணித் தலைதிறந் தவைபோற்
பூத்த இருப்பைக் குழைபொதி குவியிணர்
கழல்துளை முத்திற் செங்கிலத்து உதிர'' —அகம் 225

''வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து'' —அகம், 201

''பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ்நொடைக்கு ஊட்டும்
பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல்'' —அகம், 296

''அலங்கிதழ் நெய்தற் கொற்கை முன்றுறை
இலங்குமுத்து உறைக்கும் எயிறுகெழு துவர்வாய்''
—ஐங்குறுநூறு, 185

''கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ
மண்ணுப் பசுமுத்து ஏய்ப்பக் குவியிணர்ப்
புன்னை அரும்பிய புலவுநீர்ச் சேர்ப்பன்'' —நற்றிணை, 94

''கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு''
—சிலம்பு. 14-80

''சிருடை விழுச்சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப் பொருந''
—மதுரைக்காஞ்சி. 134-138

கொற்கை முன்துறையில் அலையடித்து வந்த சிப்பியில் தோன்றிய குளிர்ச்சியான கதிரையுடைய முத்து கரையில் சென்ற குதிரைக் காலில் பட்டுத் தடுத்ததாக அகநானூறு கூறியுள்ளது. மீன் கொள்பவர் முகந்த சிப்பியைக் கள்ளிற்கு

மாறிக்கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் முத்து கொற்கையில் அவ்வளவு எளிதாகக் கிடைத்ததாகத் தெரிகின்றது. முத்தினையும் சங்கையும் குளிப்போர் இருப்புகள் கொற்கையில் இருந்ததைப் பாண்டியனின் சிறப்பாக மதுரைக் காஞ்சி கூறியுள்ளது. விளைந்து முதிர்ந்த விழுமுத்து என்று மதுரைக்காஞ்சி கூறியிருப்பதால் முத்து விளைவதும் முதிர்வதும் முதிர்ந்தபிறகு விழுமுத்து எடுக்கக் குளித்தலும் தெரிந்திருந் தனர் என்பது தெளிவாகின்றது. புறநானூற்றுப் பாடலில் முத்து விளைதலைப்பற்றி ஒரு குறிப்பு வருகின்றது.

"தென்பவ் வத்து முத்துப் பூண்டு
....
....
....
மிசைப் பெய்தநீர் கடற்பரந்து முத்தாகுந்து" —புறம். 380

மேலிருந்து பெய்த நீர் முத்துச்சிப்பியில் விழுந்து அந்த நீரே முத்துச் சிப்பியின் வயிற்றில் முத்தாகியது என்று சங்ககாலத்தி லேயே கருதினர் என்பது தெளிவாகின்றது. ஆனால், இக்கால ஆராய்ச்சியில் முத்துச்சிப்பியின் வயிற்றில் மணல்போன்ற கெட்டியான பொருள் புகுவதால் அதன் ஊறு துன்பந் தராமல் தடுக்கவே சிப்பி வயிற்றில் ஒருவகைக் குழம்புப்பொருள் சுரந்து சுற்றி முத்தாகிறது என்று கண்டுபிடித்துள்ளனர். சிப்பியின் வயிற்றில் செயற்கையாக மணல் போன்ற பரலைப் புகுத்திச் செயற்கை முத்தை உண்டுபண்ணும் முறையை முதலில் 'மிக்கி மோட்டோ' என்ற சப்பான் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்தார். இப்போது தமிழ்நாட்டிலும் செயற்கை முத்து உண்டுபண்ணு கின்றனர். முத்து முதிர்வதைப் புறநானூறு (53) "முதிர்வார் இப்பி முத்து" என்று கூறியுள்ளது. முதிர்ந்த சிப்பியையே மூழ்கி வாரினர் என்பது தெளிவாகின்றது. தெற்குக் கடலில் முத்து கிடைத்ததைப்பற்றிச் சங்கநூல்கள் சிறப்பாகக் கூறி யுள்ளன. சிலப்பதிகாரம் முதலிய நூல்களும் தென்கடல் முத்தைப்பற்றியும் கொற்கையில் கிடைத்த முத்தைப்பற்றியும் கூறியுள்ளன.

"தென்கடன் முத்துந் தென்மலைச் சந்தும்
தன்கட னிறுக்குந் தன்மைய வாதலிற்"
—சிலம்பு. 8—19-20

"தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்" —அகம். 13

தென்பவ்வத்து முத்து, தென்கடன் முத்து, கொற்கை முத்து என்று சொல்லப்படுவதால் சிறந்த முத்து சங்ககாலத்தில்

பாண்டி நாட்டுக் கடலிலேயே கிடைத்தது என்பதில் ஐயமில்லை. அகநானூறு "தண்கடற் பிறந்த முத்தின் ஆரம்" என்ற வரியில் "தண்கடற்" என்பது தென்கடல் என்றிருக்கவேண்டும். பழைய பதிப்பில் "தன்கடல்" என்றும் பிற்காலப் பதிப்பில் 'தண்கடல்' என்றும் வருகின்றது. இந்தப் பாடங்கள் மிகவும் தவறுனவை யாகும். பாண்டியருக்கு உரித்தானவை தென்கடல் முத்தும் தென்மலைச் சந்தனமும் என்பது நூல்களின் செய்திகளி லிருந்தும் மற்றும் வரலாற்றுச் செய்திகளிலிருந்தும் தெளிவாகத் தெரிகின்றது. பெரிப்புளூசு, பிளினி என்பார் எழுதிய நூல் களில் பாண்டியனின் கொற்கையில் முத்துக் குளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. கொற்கையில் தண்டிக்கப்பட்ட குற்ற வாளிகளைக் கொண்டு முத்துக் குளிக்கப்பட்டது என்று பிளினி எழுதியுள்ளார். பிளினிக்கு முன்னர் மெகஸ்தனிசு கூடப் பாண்டியரின் முத்தைப்பற்றி எழுதியுள்ளார். பிளினி எழுதிய நூலில் சோழருடைய உறையூரில் முத்து விற்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. உறையூரில் விற்ற முத்து சோழருக்கு 'பாக்' சந்தியிலிருந்து (Palk Straits) கிடைத்ததாகக் கூறி யுள்ளனர். ஈழநாடு அக்காலத்தில் சோழர் ஆட்சிக்கு உட்பட் டிருந்ததால் ஈழநாட்டுக் கடற்கரையில் கிடைத்த நல்ல முத்து கள் காவிரிப்பூம்பட்டினத்திலும் உறையூரிலும் விற்கப்பட்டன என்று எழுதினர். சிலப்பதிகாரமும் புகாரில் விற்ற மாசறு முத்தைப்பற்றிக் கூறியுள்ளது. மாதவி அணிந்த தூமணியாகிய முத்தைப்பற்றியும் 'கண்டிரன் முத்தைப்' பற்றியும் சிலப்பதி காரம் கூறியுள்ளது. மதுரையில் வெள்ளை முத்தும் சிவந்த முத்தும் விற்கப்பட்டதும் கூறப்பட்டுள்ளது. ஆதலின் பாண்டிய நாட்டில் மட்டுமின்றிச் சோழ நாட்டிலும் சங்ககாலத்தில் முத்து மலிந்திருந்தது. இந்த முத்துகளே முசிறி, தொண்டி ஆகிய துறைமுகங்களுக்குச் சென்று ஏற்றுமதியாயின.

கிரேக்க வணிகர் முசிறியிலும் தொண்டியிலும் சிறந்த முத்துகளைப் பெற்றதாக பெரிப்புளூசு எழுதியுள்ளார். கிரேக்கர் களும் உரோமர்களும் தமிழ்நாட்டு முத்திற்காக எவ்வளவு விலை யாயினும் கொடுத்து வாங்கினர். ஆயிரக்கணக்கான கல் தொலைவு கடந்து முத்தைத் தேடி அலைந்ததற்காகவும் அதற்காக உரோம நாட்டின் செல்வத்தை வீணுக்கியதற்காகவும் பிளினி சினத்துடன் உரோமப் பெருங்குடி மக்களைத் தாக்கி எழுதினர். காதுகளில் 'கிலிகிலி' என்று முத்தின் ஒலியைக் கேட்டு மகிழ் வதற்காகவே முத்தைக் காதணியாக அணிந்ததையும் செருப்பில் கூடத் தமிழ்நாட்டு முத்தை அணிந்து மகிழ்ந்ததையும் கண்டு பிளினி வருந்தினர்.

(தொடரும்)

செம்மல் உள்ளம்

[செஞ்சொற் கொண்டல்,
டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

உணரும் உவமைகள் :

கடமைகளைச் செய்து முடித்த பிறகு உள்ளத்தில் ஒரு நிறைவு உண்டாகின்றது; அது நினைக்க நினைக்க நிம்மதியைத் தருவதாக அமைகின்றது. அந்த நிம்மதிக்கு நிகர் ஏதும் இல்லை. அதில் ஓர் இனிமையும் உண்டு. ஒரு தலைவன் தன்னுடைய தலைவியின் இனிய இயல்பிற்கு இந்த இனிமையை ஒப்பிட்டுப் பேசுகின்றான். இப்படி ஒரு சங்கப்பாட்டிற் காண்கின்றோம்.

''உள்ளிய வினைமுடித்தன்ன இனியோள்''-எண்ணிப் பார்த்தால் தோன்றும் நுட்பமான பொருளே இரண்டும். பருப்பொருள் பற்றிய உவமைகளைவிட இத்தகு நுண்பொருள் பற்றிய உவமைகள் ஆழ்ந்து கருதுதற்குரியவை. உவமையும், உவமிக்கப் படும் பொருளும் கண்ணுக்குப் புலனாகாத நுட்பம் இதில் உள்ளது. அநுபவத்திற்கு மட்டுமே புலனாகும்படி இத்தகைய உவமைகளைப் புலவர்கள் படைத்து விடுகின்றார்கள். இவற்றை ஆழ்ந்து அநுபவித்தற்கு வேண்டுவது சீரிய உணர்ச்சியே. தலைவியின் இனிய இயல்பு அநுபவத்தில் தலைவன் அறிந்த ஒன்று; கடமையை முடித்த இனிமையும் அவன் அறிந்ததே. ஆதலின் தலைவனின் கூற்றாக இதனை அமைத்த புலவர் புலமைத் திறம் பாராட்டத் தக்கதாக உள்ளது.

உலகியல் திறம் :

ஏதாவது ஒன்றைத் தொடங்குவதும் தொடங்கிச் செய் வதும் உலகில் மாந்தர்க்கு இயல்பே. தொடங்கியதொன்றினை இடையில் விட்டுவிடாது முட்டின்றி முடித்தலே ஆடவர் இயல்பு. தடைப்படினும் அறிவாற்றலைக் கொண்டு தடைகளை உடைத்தெறிந்து முற்ற முடித்தல் வேண்டுவது. இடையூறு கண்டதும் மனம் தளர்ந்து தொடங்கிய தொன்றினை இடையில் விட்டு வேறு தலைப்படுவது அறிவிலார் செயல். சிந்தித்து நல்ல தொன்றை, ஏற்றதொன்றை ஆற்றப்புகுவதும் அதனை முற்ற முடித்தலும் அறிவுடையோர் பாராட்டத் தக்க செயல்கள்.

'இடுக்கணழியாமை' என்று தமிழ்மறை பத்துக் குறட்பாக்க ளால் இத்தகு மனவுறுதியையே தெளிவாக்கியுள்ளது.

ஒக்கூர் மாசாத்தியார் படைப்பு :

செய்யத் தொடங்கிய வினையை முடித்த ஒரு தலைவன் உள்ளத்தைச் 'செம்மல் உள்ளம்' என்று பாராட்டுகின்றார் சங்கப் புலவர் ஒக்கூர் மாசாத்தியார். தோழி தலைமகட்கு உரைக்குங் கூற்றாக இப் பெண்பாற் புலவர் பாடும் குறுந்தொகைப் பாட் டொன்றில் இவ்வரிய தொடரைக் காண்கின்றோம் :

> ''முல்லை யூர்ந்த கல்லுய ரேறிக்
> கண்டனம் வருகஞ் சென்மோ தோழி!
> எல்லூர்ச் சேர்தரு மேறுடை யினத்துப்
> புல்லார் நல்லான் பூண்மணி கொல்லோ,
> செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
> வல்வில் இளையர் பக்கம் போற்ற
> ஈர்மணற் காட்டாறு வரூஉம்
> தேர்மணி கொல்லாண்டு இயம்பிய உளவே.'' (275)

'செம்மல் உள்ளம்' என்ற தொடர் எண்ணி இன்புற வேண்டிய செந்தமிழ்த் தொடர். நிறைவுடைய உள்ளம் என்று டாக்டர். உ. வே. சா. ஐயரவர்கள் இதற்குப் பொருள் காண்பர். தலைவனுடைய தேரின் மணியோசை கேட்ட அளவில் அவன் வருகின்றான் என்று தோன்றுவதைத் தோழி குறிக்கின்றாள். ''மாலைக் காலத்தில் ஊர் வந்து சேர்கின்ற காளையுடைய பசுவினத்தின் கழுத்திற் பூண்ட மணியோசையோ? தான் செய்த வினையை முற்ற முடித்ததனாலுண்டாகிய நிறைவு ஆர்ந்த நெஞ்சத்தோடு, வலிய வில்லையுடைய இளைய வீரர் தன் அருகிற் பாதுகாப்ப, காட்டுவழியிலே வரும் தேரின் மணியோசையோ? முல்லைக் கொடி படர்ந்த கல்லின்மேல் ஏறிக்கண்டு வருவோமா?'' என்று பாங்கி கேட்கின்றாள். இங்குத் தலைவன் தன் கடமையை முடித்து வருகின்றான் ஆதலின் அவனது உள்ளம் நிறைந்து தோன்றும் என்பது நினைந்து 'செம்மல் உள்ளம்' என்று குறித்தமை ஒக்கூர் மாசாத்தியாரின் நுண்மாண் நுழைபுலத்தை நுட்பமாக உணர்த்துகின்றது.

நக்கீரர் படைப்பு :

நக்கீரர் தம் திருமுருகாற்றுப் படையுள் இதே சொற் றொடரைக் கையாள்கின்றார்; ஆனால், அக் கவிஞர் பெருந்தகை

யின் கருத்தில், செம்மல் உள்ளம் என்பது முருகன் திருவடிகளை எண்ணுகின்ற தூய அன்பு சான்ற உள்ளம் என்பது நக்கீரர் கருத்து.

"அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு"

'தலைமையினை யுடைத்தாகிய உள்ளம்' என்று இத் தொடர்க்கு நச்சினார்க்கினியர் உரை காண்பர்.

"செம்மல் உள்ளமொடு செல்குவி ராயின்"

என்ற சிறுபாணாற்றுப் படை (145) வரியுள்ளும்,

"அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு"

என்ற அகநானூற்று (184) வரியுள்ளும் இதே தொடர் காணப் பெறுகின்றது. சிறுபாணாற்றுப்படை வரிக்கு உரைகாணும் போதும் 'தலைமை' என்றே 'செம்மல்' என்ற சொல்லுக்குப் பொருள் காண்பர் நச்சினார்க்கினியர். தலைமைசான்ற உள்ளம் என்பது நக்கீரரைப் பொறுத்த வரையில் இறைவன் திருவடியை எண்ணுகின்ற உள்ளம் என்பதே உணரத்தக்க கருத்து.

"திருவடியே வீடாயிருக்கும் என்றார்; அது 'தென்னன் பெருந்துறையான், காட்டாதனவெல்லாம் காட்டிச் சிவங் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி' (திருவாசகம்—திருவம்மானை—6) என்பதனானும் பிறரும் திரு வடியைக் கூறுமாற்றானுமுணர்க"—என்ற நச்சினார்க்கினியர் உரை பொருளாழமுடையது. அத் திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளைப் பல பிறப்புகளிலும் விரும்பி நிகழ்த்தின கோட்பாட்டானே தலைமையினை யுடைத்தாகிய உள்ளம் என்று காரணம் காட்டுகின்றார் நச்சினார்க்கினியர். பல பிறவிகளிற் செய்த நல்வினையாலேயே அத்தகு கோட்பாடு முருகன் திருவடியை நினையும் நெஞ்சத்திற்கு உண்டாயிற்று என்பது கருத்து. வேறு வகையான உலகியல் நினைவுகள் விளையாது, வாலறிவன் நற்றாள் தொழுதலை நினைந்தமை 'செம்மல்' தன்மைக்கு அடிப்படையாயிற்று.

அப்பர் திருப்பாட்டு:

திருநாவுக்கரசர் தேவாரத்துள் வரும் ஒரு திருப்பாட்டு இங்கு உணரத்தக்கது:

''மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே.''

செம்மை—செம்மல் ஒரு பொருளன; மெய்ம்மை முதலிய பண்புகள் உடைமையின் செம்மை, அல்லது செம்மல் உள தாகும்; அது சிவகதியாகிய வீட்டின்பத்தைக் கூட்டும் என்பது இங்குக் காட்டப்பெறும் உண்மை.

நோக்கு :

இக் கவிதைகளைக் கற்போர்க்குச் 'செம்மல் உள்ளம்' உளதாகி நற்பேறு கிட்டவேண்டுமென்பதே இவ்வருளியற் சான்றோர்களின் திருவுளக்கிடக்கை என்றால் அது மிகையாகாது. இக் கட்டுரைச் சிந்தனை அதற்கு ஓரளவு துணைபுரியும் என்பது கட்டுரையாசிரியனின் நோக்கு.

அருளாளர்க்கே உயர்வு கொடுத்தல் வேண்டும்

''கல்வியிலும் நுண்ணறிவிலும் சிவநேய அடியார் நேயங் களிலும் அருளொழுக்கத்திலும் சிறந்தார்க்கே உயர்வு கொடுக்க வேண்டுமே யல்லாமல், வெறும் பிறப்புப் பற்றி இவ் வியல்புகள் இல்லார்க்கு உயர்வு கொடுத்தல் ஆகாது.''

—மறைமலையடிகள்

(மறைமலையடிகள் அறிவுரைக் கோவை, பக். 201)

செந்தமிழாய் வாழ்க

[புலவர். பொ. முனியப்பன்]

1. தன்னேரில் உலகமுதல் தாய்த்தமிழ்க்கே ஆக்கம்
நண்ணிடவே பணிகளினை நாட்டிவரும் நோக்கம்

2. கொண்டதனால் முகிழ்த்ததுவே குறைவில்லா ஊக்கம்
தண்டமிழ்நூற் கிவரன்றே தனிப்பெரிய தேக்கம்

3. முத்தமிழ்நூல் பதிப்பதுவோ மூச்சுநிகர் செய்கை
இத்தரைக்குப் பயனுதவும் இனியதமிழ்ப் பொய்கை

4. கடல்கோட்குத் தப்பிவந்த கனிதமிழ்நூல் யாவும்
மடமகற்றக் கழகத்தின் மடியமர்ந்து கூவும்

5. பண்டொளிர்ந்த தமிழ்ச்சிறப்பைப் பரப்பிவரும் உழைப்பு
மண்டிவந்த பகையொழிய மாண்பொன்றே விளைப்பு

6. இன்றெழுந்த பல்கலையும் இணைத்துரைக்குந் தொண்டு
நின்றிலங்கும் பேழைகளும் நிறைவுதர உண்டு

7. நலமுதவுஞ் சிவனியத்தை நாள்தோறும் போற்றல்
வளமிகுந்த தனித்தமிழை வளர்த்துவரும் ஆற்றல்

8. இத்தகைய பண்புகளை ஏந்தியவர்க் கில்லை
தத்தளிக்க வைக்கின்ற தளர்முதுமைத் தொல்லை

9. எண்பதுற்ற சுப்பையா இளம்அகவைப் பிள்ளை
மன்பதையில் தமிழ்போல மணக்கின்ற முல்லை

10. ஞாலமெல்லாம் தமிழ்பரப்பும் நற்பணியில் ஆழ்க
சீலமுற்றே ஊழிபல செந்தமிழாய் வாழ்க.

நாளும் திருக்குறள் படி !

[புலவர். தி. நா. அறிவு ஒளி., எம். ஏ.,]

முகநிலை

திருக்குறள் படித்திடு நாளும்—வாழ்க்கை
திகழ்ந்திடும் உயர்ந்தல காளும்!—மேலும் மேலும் (திருக்)

இடைநிலை

உருக்கத்தை வளர்த்திடும் நெஞ்சில்—உண்மை
உணர்வொளி செழித்திடும் மன்றில்!—அழகு (திரு)

முரிநிலை

அறநூலில் குறள் போல அறிவார்ந்த துண்டோ?
அறிவாளர் பலர் மூக்கில் விரல்சேர்த்த துண்டே.
மறநூலில் குறள் போல மகிழ்வார்ந்த துண்டோ?
மலர்ந் தாளும் உயிர் மாண்பின் திறமார்ந்த நுண்மை (திரு)

திருவாட்டி கி. இலக்குமிபாரதி அம்மையார் கடிதம்

டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் திருமகளார் திருவாட்டி தியாகி கி. இலக்குமிபாரதி அம்மையார் தம் கணவர் திருவாளர் கிருட்டிணசுவாமி பாரதி அவர்கட்கு, தாம் 1—3—77இல் இறையடி சேர்தற்கு முன் சென்னையிலிருந்து நயினாரகரத்திற்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது. இக் கடிதம், அம்மையார் தம்முடைய முடிவை முன்கூட்டியே அறிந்து கூறுவதுபோல் அமைந்துள்ளது. அத்துடன் இக்கடிதத்தில் அம்மையார் கூறும் கருத்துகள் பொதுவாகவே பெண்கள் உலகிற்கு அறிவுரை வழங்குவதுபோல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னை,
27—1—77.



"நலம். சின்னச்சின்ன செயல்களுக்கெல்லாம் சினங்கொள்ளும் வழக்கத்தை விட்டுவிட்டால் உடம்பு நன்றாக இருக்கும். சிடுசிடுப்பே இல்லாமல் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்து வந்தால் முகமும் இலக்குமிகளையாகும்; உடம்பும் களைப்பில்லாமல் இருக்கும். பிடிக்கிறதோ இல்லையோ யாரிடம் பேசினாலும் பொறுமையாகப் பேசிப் பழக வேண்டும். நாம் அதிகம் பேசுவதைவிட மற்றவர்கள் பேசுவதைத்தான் அதிகம் கவனிக்க வேண்டும்.

காலையில் உடம்பு இடம் கொடுக்கவில்லை என்று நினைக்காமல் எப்படிக் கிணற்றுத் தண்ணீர் அடிக்கக் காலையில் செல்லுகிறீர்களோ, அப்படிக் குளித்துப் பின் பலகாரஞ் சாப்பிட்டால் நல்லது. மனத்தைத் திருப்ப வேண்டும். வாழ்க்கையை அநேகமாகக் கழித்துவிட்டோம். இன்னும் எவ்வளவு நாளோ? அதை மகிழ்ச்சியாகவும் பொறுமையாகவும் காலத்தைக் கழித்தால் மனத்திற்கும் உடம்பிற்கும் நல்லது. ஏதோ எனக்கு மனதில் பட்டதை எழுதினேன். தப்பிதமானால் மன்னித்துவிடுங்கள்.

எது எப்படி எப்போது நடக்குமோ அப்படித்தான் நடக்கும். தாங்கள் அதிக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டாம். நடக்கிறபடி நடக்கட்டும் என்று மனதைச் சரிப்படுத்திக்கொண்டு வேலை செய்யுங்கள். எல்லாம் ஆண்டவன் விருப்பப்படி நடக்கட்டும். நாம் பிரார்த்தனை செய்வோம்.

தங்கள் அன்புள்ள,
கே. லட்சுமிபாரதி.

நயினாரகரம்,
31—1—77.

அன்புள்ள, இலட்சுமி அம்மாளுக்கு,

வாழ்த்துக்கள் பல. நலம். நலமே நிலமெலாம் நிலவுக. உன் அன்பார்ந்த 27—1—77 கடிதம் கிடைத்தது. உனக்கு நேரம்

கிடைத்து நீ எழுதியிருப்பது எனக்கு அளவிலா மகிழ்ச்சி தந்தது. மிகவும் பொறுமையாகவே இருந்து வருகிறேன். எனக்கு அடிக்கடி நினைவுபடுத்த உனக்கு எல்லா உரிமையும் உண்டு. என் நன்மையைக் கருதித்தானே சொல்லுகிறாய். இருக்கிற நாளில் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பது தெய்வ வாக்கு. நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதே என் வாழ்க்கையின் குறிக்கோள். இது சத்திய வாக்கு.

(உண்மைப் படி)

நற்றவங்கள் முற்பிறப்பில் நான்செய்தேன் ஆதலினால்
மற்றுன்னைப் பெற்றேன் மனையாளாய்ப்—பெற்றெடுத்த
பிள்ளைகளால் பேரும் புகழும் பெறுவதனால்
உள்ளநிறை கின்றேன் உவந்து.

அன்புள்ள,

கிருட்டிணசாமிபாரதி.

மாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் பாடும்போது அருகிருந்து நேரிற் கேட்கும் பேறு

திருநெல்வேலி திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் பாளையங்கோட்டை நகராட்சியைச் சேர்ந்த வண்ணார்பேட்டை முக்கில் தென்பக்கம் ஞானமணியம்மாள் சத்திரம் உள்ளது. அதன் முகப்பு வரிசையில் சில அறைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் திருவாளர் வேதநாயகம் பிள்ளை, எம்.ஏ., பி.எல். அவர்களும், மற்றொன்றில் பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை, பி.ஏ.பி.எல். அவர்களும் தம் அலுவலகங்களை வைத்து வழக்குரைஞர்களாகப் பணியாற்றி வந்தனர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் மறைத்திரு மறைமலையடிகளார் அவர்களின் மாணவராய் இருந்த அவ்விருவரும் என்பால் மிக்க அன்புடையவர்களாவர்.

1919ஆம் ஆண்டு 'இறுதியில் ஒருநாள் திரு வேதநாயகம் பிள்ளை அவர்களிடம் யான் போயிருந்தபோது அவர்களுடன் பயின்று பட்டம் பெற்ற நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் வந்தனர். 1919ஆம் ஆண்டில்தான் கவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் கடையத்தில் உள்ள தம் மாமனார் வீட்டில் மனைவயாரொடு தங்கியிருந்தார். தம் நண்பர் சுப்பிரமணிய பாரதியார் கடையத்திலிருந்து எட்டயபுரத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் புகைவண்டி திருநெல்வேலி பாலம் நிலையத்திற்குப் பிற்பகல் 3 மணிக்கு வரும் என்று நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் சொன்னார்கள்.

கவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களைத் திருநெல்வேலி நிலையத்தில் இறங்கச்செய்து அழைத்து வருமாறு திரு. வேதநாயகம் பிள்ளை அவர்களும், யானும், திரு. வையாபுரிப்பிள்ளை அவர்களும் கூறவே திரு. சோமசுந்தரபாரதியார் அவர்கள் தொடர்வண்டி நிலையத்திற்குச்

சென்று கவி பாரதியார் அவர்களை அழைத்து வந்தனர். மாலைச் சிற்றுண்டி அருந்தியபின் வண்ணார்பேட்டையை ஒட்டிய பொருநையாற்றுப் படுகையில் கவி சுப்பிரமணிய பாரதியார் தாம் முன்பு பாடிய பாடல்கள் சிலவற்றைக் கேட்பவர் உள்ளங் கிளர்ச்சியுறுமாறு பாடினார்கள். அவற்றில் ஒரு பாட்டு மட்டும் அடியில் குறிக்கப்பெறுவதாகும்.

[1]"வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாகவி ளங்கிடுவாய்
தெள்ளு கலைத்தமிழ் வாணி! நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்
எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி
இராதென் றன் நாவினிலே
வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல்சக்தி
வேல்சக்தி வேல்சக்தி வேல்."

அந் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்கள் திரு. எல். கிருட்டிணசாமி பாரதியார், திரு. சோ. இலக்குமிரதன் பாரதியார், திரு. ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், புத்தகக்கடை திரு. முத்தையாபிள்ளை ஆகியோரும் மற்றுஞ் சில நண்பர்களுமாவர்.

வ. சு.

---

1. இஃது 'ஓம் சக்தி' என்னுந் தலைப்பிலுள்ள பாடல்களில் ஒன்றாகும்.

இந்திய நாடாளு மன்றத்தின் ஆறுவது பொதுத்தேர்தல்

1977ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இடைப் பகுதியில் இந்திய நாடாளு மன்றத்தின் ஆறுவது பொதுத்தேர்தல் 77 மார்ச்சில் நடைபெறும் என்று இந்தியப் பேரரசு அறிவித்தது. 77 மார்ச்சு 16, 18, 19, 20 ஆகிய நான்கும் வாக்குப் பதிவு நாள்களாகக் குறிக்கப்பட்டன.

தேர்தலில் சனதா, சனநாயகக் காங்கிரஸ், காங்கிரஸ், மார்க்சியப் பொதுவுடைமைக்கட்சி, இந்தியப் பொதுவுடைமைக்கட்சி, தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. முதலிய பல்வேறு கட்சிகள் போட்டியிட்டன; தனியார் சிலரும் போட்டியிட்டனர். ஆயினும் பன்முனைப் போட்டியைத் தவிர்க்கும் பொருட்டுக் கட்சிகள் யாவும் கட்சிக் கூட்டும், தொகுதி யுடன்பாடும் செய்துகொண்ட இருபேரணிகள் தேர்தல் களத்தில் சந்தித்தன.

தமிழ்நாடு புதுவை மாநிலங்களில் சனதா, தி.மு.க., மார்க்சியப் பொதுவுடைமைக்கட்சி ஆகிய கட்சிகள் ஓரணியாகவும், காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க., இந்தியப் பொதுவுடைமைக்கட்சி, முஸ்லீம்லீக் ஆகிய கட்சிகள் ஓரணியாகவும் தங்களுக்குள் தொகுதி ஒப்பந்தம் செய்து கொண்டன.

இந்திய நாடாளு மன்றத் தொகுதிகள் மொத்தம் 542 ஆகும். அவற்றில் பேரேப்பூர், மண்டி, வடாக் ஆகிய தொகுதிகளில் இனித் தான் தேர்தல் நடைபெறவிருக்கிறது. மற்ற 539 இடங்களில் சனதா: 270, சனநாயகக் காங்கிரஸ்: 28, காங்கிரஸ்: 153, மார்க்கசியப் பொதுவுடைமைக்கட்சி: 22, இந்தியப் பொதுவுடைமைக்கட்சி: 7, தி.மு.க.: 1, அ.இ.அ.தி.மு.க.: 19, மற்ற கட்சிகள்: 31, தனியார்: 8 என்னும் அளவில் வெற்றி பெற்றுள்ளன. இவற்றுள் தமிழ்நாடு, புதுவை மாநிலங்களில் உள்ள 40 தொகுதிகளுள் சனதா: 3, தி.மு.க.: 1, காங்கிரஸ்: 14, அ.இ.அ.தி.மு.க.: 20, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி: 2 என்னும் அளவில் வெற்றி பெற்றுள்ளன.

காங்கிரஸ் 153 இடங்களில் வெற்றி பெற்றிருப்பினும் முன்னாள் தலைமையமைச்சர் திருவாட்டி இந்திராகாந்தியும், அவர்தம் மகனார் சஞ்சய்காந்தியும் தோல்வியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் வடசென்னைத் தொகுதித் தி.மு.க. வேட்பாளர் திரு. ஆசைத்தம்பி அவர்களும், நடுவண் சென்னை வேட்பாளரும் தமிழ் நாட்டுச் சனதாக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திரு. பா. இராமச் சந்திரன் அவர்களும், பழனித் தொகுதிக் காங்கிரஸ் வேட்பாளரும் நடுவணரசு முன்னாள் நிதியமைச்சரும் ஆகிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்க சிறப்பினவாகும்.

கணிசமான பெரும்பான்மை பெற்ற சனதாக் கட்சியின் சார்பில் தலைமையமைச்சராக, திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார். ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் உட்பட மற்றும் பத்தொன்பதின்மர் அமைச்சர்களாக அமர்த்தப் பெற்றுள்ளனர். நாடாளு மன்ற அவைத் தலைவர் பொறுப்பு திரு. சஞ்சீவரெட்டி அவர்களுக்கு அளிக்கப் பெற்றுள்ளது. இவர் ஒருவர் மட்டுமே ஆந்திரமாநிலத்தில் சனதா கட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

புதிய அமைச்சரவை 24—3—77ஆம் நாள் பதவியேற்றுள்ளது. தமிழ்நாட்டின் சனதாக் கட்சித் தலைவர் பேராசிரியர் பா. இராமச் சந்திரன் அவர்கள் இந்த அமைச்சரவையில் மின்சாரம் மற்றும் எரி பொருள் துறை அமைச்சராக இடம் பெற்றுள்ளது மகிழ்தற்கும் பாராட்டுதற்கு முரியதாகும்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை நினைவு விழா

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் நினைவு விழா கடந்த 2, 3, 4, 5, 6 ஆம் நாள்களில் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. முது பெரும் புலவர் அ. நடேசமுதலியார் அவர்கள் மகாவித்துவான் நினைவுப் பேருரை நிகழ்த்தினர். 6-4-77 இல் திரு. தி. மு. நாராயணசாமிப் பிள்ளையவர்கள் தலைமையில் இரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களால் முதுபெரும் புலவர் நடேச முதலியார் அவர்கட்குப் பொற்கிழி வழங்கப்பெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தற்காலிகத் துணை வேந்தர் தமிழ் மாமணி பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் சிறப்புப் பேருரை நிகழ்த்தினர்.

நக்கீரர் கழகம்

தமிழறிந்த தமிழர் என்று சொல்லப்படுகின்ற யாரும், சங்ககாலப் புலவர்களுள் நக்கீரரைப் பற்றி அறியாதிரார். தமக்குச் 'சரி' எனப் பட்டதைத் துணிவுடன் கூறுபவர் நக்கீரர்.

அத்தகைய தன்மானத் தமிழ்ப் புலவன் பெயரில் ஒரு கழகம் அமைத்துக் கடந்த 48 ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி ஆற்றி வருபவர் நச்சினார்க்கினிய ரெனப் பெயர் பூண்ட நற்றமிழ்த் திருவாளர் சிறுவை மோகன சுந்தரம் அவர்கள் ஆவார்.

சென்னைப் பெத்துநாயகன் பேட்டை என்னும் பகுதியில் 'தமிழகம்' என்னும் ஒரு சிறு வீட்டில் 1941ஆம் ஆண்டில் இந் நக்கீரர் கழகத்தைத் தோற்றுவித்தார் நச்சினார்க்கினியராகிய சிறுவை மோகனசுந்தரம் அவர்கள்.

முதன் முதல் இக் கழகத்தை வாழ்த்தி அருளியவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களாவார். அவ்வாழ்த்து இன்றளவும் நக்கீரர் கழகம் என்னும் தமிழ்த் தென்றலாக வீசிக் கொண்டிருக்கிறது.

தமிழ் மொழி - தமிழினம் - தமிழ்நாடு என்ற மூன்றுக்கும் பல் லாற்றானும் தூய தொண்டு புரிவதே இக் கழகத்தின் நோக்கமாகும். இந் நோக்கத்தை அடிப்படையாக வைத்து ஆராய்ச்சிகள் நடத்துதல், கருத்தரங்குகள், தமிழ் வகுப்புகள் முதலியன நடத்துதல், தமிழ்ப் புலவர்களைப் போற்றுதல், மறைந்த தமிழ்ப் பெரும் புலவர்களைத் தமிழர் மறவாதிருக்க ஆண்டுதோறும் அவர்கட்கு நினைவுவிழா எடுத்தல்.

இக் கழகம் ஆற்றிவரும் நற்றமிழ்ப் பணிகளுள் (1) பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு (2) திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி (3) பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூல்நிலையம் (4) மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு (5) டாக்டர் எஸ். தருமாம்பாள் மகளிர் இலக்கிய வட்டம் ஆகியன குறிப்பிடத் தக்கவை.

அத்துடன் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி வாயிலாக 1944ஆம் ஆண்டிலிருந்து புலவர் புகுநிலை, புலவர் முதனிலை, புலவர் இறுதிநிலை, தமிழ் எம்.ஏ., ஆகிய வகுப்புகளைத் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தி வருகின்றது. தனிப்பட்ட முறையில் புலவர் தேர்வுக்குச் செல்வோர் 30 அகவையினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றிருந்த விதியினை மாற்றி 20ஆம் அகவையிலேயே தேர்வுக்குச் செல்லலாம் என்ற நிலையினைப் போராடிப் பெற்ற பெருமை இக் கழகத்தார்க்கு உண்டு.

இக் கழகத்தால் 1959இல் துவங்கப்பெற்ற மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு இதுகாறும் 48 ஆராய்ச்சிக் கூட்டங்களை நடத்தியிருக்கின்றது. கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, இன்ன பிறவற்றால் மாணவரிடையே பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் பரவும் வகை செய்து வருகின்றது.

இங்ஙனம், நக்கீரர் கழக வாயிலாகப் பல்லாற்றானும் நற்றமிழ்ப் பணியாற்றிவரும் திரு. சிறுவை மோகனசுந்தரம் அவர்கட்கு நம் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தமிழ் அன்பர்களுக்கு அரும்பொருட் கருவூலம்*

பல்லாண்டுகட்கு முன்பு சென்னையில் வாழ்ந்த தமிழ் இலக்கியப் பேரறிஞரும் மறுமலர்ச்சியாளருமான சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் பல்வேறு தலைப்புகளில் ஏறத்தாழ 4,500 நூல்களைத் தொகுத்தார். அவற்றை அவர் கண்ணுங் கருத்துமாக உறையிட்டு எண்ணிட்டு வகைப்படுத்தி வைத்திருந்தார். அந் நூல்களைத் தாம் படித்ததற்கடையாளமாகப் பக்கங்களில் ஓரங்களில் தம் கைப்படக் குறிப்புகள் எழுதி வைத்துள்ளார். தனிப்பட்டோர் தொகுத்தவற்றுள் சிறந்த ஒரு தொகுப்பு இன்று சென்னையில் உள்ள ஒருபொது நூலகத்தின் பகுதியாக இடம் பெற்றுள்ளது. [இதையொட்டி அடிகளாரின் வரலாற்றுக் குறிப்பு ஒரு பத்தியில் சுருக்கமாக வெளியிடப் பெற்றுள்ளது]

இத் தொகுப்பு சென்னை ஜார்ஜ்டவுன் பகுதியிலுள்ள இலிங்கிச்செட்டித் தெருவில் மறைமலையடிகள் நூல் நிலையத்தின் அடிப்படைத் தொகுப்பாக உள்ளது. இந் நூலகம் தமிழறிஞர்களின் புனிதத் தலமாகத் திகழ்கிறது. பேராசிரியர் ரங்காச்சாரியாவின் தொகுப்பும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தொகுத்து வைத்துள்ள 5,000 நூல்களும் இதனுடன் இணைக்கப் பெற்று 1958இல் இந்நூலகம் தொடங்கப் பெற்றது. அறிஞர்களின் ஆராய்ச்சிக்கும் உயர் கல்விக்கும் இந் நூலகம் பெருந்தொண்டு ஆற்றி வருகின்றது. பல்வேறு துறைகளிலும் இங்கு நூல்கள் உள்ளதால் இவை ஒப்பாய்வுக்குப் பெரிதும் பயன்படும். கடந்த இருபது ஆண்டுகளில் 20,000 நூல்களுக்கு மேல் புதிதாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. இவற்றுள் பல அரிய நூல்களும் இடம்பெற்றுள்ளன.

திருக்குறள் தொடர்பான 600 க்கு மேற்பட்ட நூல்கள் இங்குள்ளன. ஆங்கிலம், லத்தீன், பிரெஞ்சு, சீனம், பிஜி, மலேயா, பர்மீயம், ருசியம், சிங்களம் போன்ற பல மொழிகளில் பேரிலக்கியமான திருக்குறளின் மொழி பெயர்ப்பு நூல்கள் இதில் அடங்கும். டாக்டர் ஜி. யு. போப் தம் ஆங்கில மொழி பெயர்ப்புக்குப் பயன்படுத்திய திருக்குறள், நாலடியார், திருவாசகம் மூலநூல்கள் இங்குள்ள பெருமதிப்பான நூல்களாகும். நெதர்லாந்து, தரங்கம்பாடி ஆகிய இடங்களில் இருநூற்றாண்டு கட்குமுன் அச்சான தமிழ் நூல்கள் தமிழ் அச்சுக்கலையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன. பல்வேறு காலங்களில் அச்சான தமிழ் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் 600 க்கு மேற்பட்டவை இந் நூலகத்தில் தொகுத்துவைக்கப் பெற்றுள்

*8-4-77 Hindu 'இந்து' நாளிதழில் மறைமலையடிகள் நூல்நிலையம் பற்றிப் படங்களுடன் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்.

என. அவற்றுள் சில: பிழைக்கும் வழி (1913), விவேக சிந்தாமணி 1898), கிராமதூதன் (1942), தமிழர் போதினி (1923), உதய தாரகை (1841), இவை தவிர இரணவைத்தியம் (1867), மனுஷ வங்காதிபாதம் (1872), சோதிட சாஸ்திரம் (1848) போன்ற தமிழ் நூல்களும் 1779 இல் வெளிவந்த 'தமிழும் இங்கிலீசுமா யிருக்கிற அகராதி' யும் நூலகத்தில் உள்ளன. இவையன்றித் திரு. வி. க. பதிப்பித்த திருமந்திரம் (1909), பா. வே. மாணிக்க நாயகரின் 'Betwixt ourselves in the Madras Zoo' போன்ற நூல்களும் மாவட்ட விவர ஏடுகளும் (Gazetteers) நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. மற்றோர் அரிய நூல் தமிழரின் தோற்றத்தை விவரிக்கும் 'Lost Lemuria' என்பதாகும்.

இந்த அரும்பொருட் கருவூல மனை சிறந்த பண்பாட்டு நிலையமாகவும் திகழ்கின்றது. வீரமாமுனிவர், போப் போன்ற மேனாட்டறிஞர்கள் எழுதிய நூல்களின் முதல் பதிப்புகள், பழம் பதிப்புகளின் தொகுப்பில் காணப்படுகின்றன. வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் முதன் முதல் சொற்பொழிவாற்றிய மனையில் இந் நூலகம் அமைந்திருப்பது பெருஞ் சிறப்புக்குரியதாகும். தமிழ்ப் பேரறிஞர்களின் திருவுருவப் படங்கள், வ. உ. சி., ஆறுமுக நாவலர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்கள், தீப்பெட்டியைவிடச் சிறிய அளவில் பதிப்பிக்கப்பெற்ற சேக்ஸ்பியர் நாடக நூல் போன்றவை இங்கு இடம் பெற்றுள்ள அரிய பொருள்களில் குறிப்பிடத் தக்கவையாம்.

மறைமலையடிகளாரின் பேரர்
திரு. கு. ஆளுடைய பிள்ளை, எம். காம்., பி.எல்.
20-1-77 இல் வழங்கிய பாராட்டுரை

இன்று மறைமலையடிகள் நூல்நிலையம் காணும் வாய்ப்பு பெற்றேன். மிக அருமையான கிடைத்தற்கரிய நூல்கள் பல இந் நூல் நிலையத்தில் இருப்பது காணப் பெருமகிழ்ச்சி. தமிழிலும் ஆங்கிலத்திலும் தரமான நூல்களை முறையாகத் தொகுத்து வைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும், அறிவு வேட்கை மிக்கோருக்கும் அரியதொரு தொண்டினை இந் நூல்நிலையம் செய்து வருவது பெரிதும் பாராட்டத்தக்கது. கழக ஆட்சியாளர் திரு. சுப்பையா அவர்களும் நூலகர் திரு. முத்துக் குமாரசாமி அவர்களும் இம் முயற்சியைத் தொடர்ந்து நடத்திவர இறைவன் அருள் பாலிப்பானாக. கல்விக் கருவூலமாக விளங்கும் இந் நூல்நிலையம் மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

மறைத்திரு மறைமலையடிகளார் தம் மருகரும், ஆட்சியாளர் தமையனுருமாகிய திரு. வ. திருவரங்கம் பிள்ளை அவர்களுக்கு 31—10—1928இல் எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி

"இனி, இப்போது உங்கள் தம்பி திருச் சுப்பையா பிள்ளை எனக்குத் தரும் வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டியிருக்கின்றது. உங்கள் கழக விற்பனைக்கு வேண்டிய என் நூல்களை அவ்வப்போது தரகு கழித்துக் கொடுத்துவந்தேன். அதனால் அவ்வப்போது என் செலவுகளுக்குப் பணம் வந்தமையாலும் உடனுக்குடன் கணக்குத் தீர்ந்துபோனமையாலும் எனக்குத் தொல்லையில்லாமலிருந்தது. ஆனால் 2 திங்கட்குமுன் உங்கள் தம்பி என்னிடம் வந்து, "அவ்வப்போது நூல்களை வாங்குவது தொழின் முறைக்கு இசைய வில்லை. ஆதலால் மொத்தமாக ஒவ்வொன்றிலும் பத்துப் பத்து'க் கொடுத்துவையுங்கள். திங்கடோறும் விற்பனைக் கணக்குப் பார்த்துப் பணந் தருகிறோம்; இடையிற் செலவுக்கு வேண்டுமானாலுந் தருகிறோம்'' என்று சொல்லி இருநூறு ரூபாய்க்குமேல் என்னுடைய நூல்களை வாங்கிக் கழகத்தில் வைத்துக் கொண்டார். ஆனால் இப்போதோ இடையிற் செலவுக்குப் பணந்தர இயலாதென்றுந் திங்கள் முடிவிற்றான் கணக்குப் பார்த்துத் தரல் கூடுமென்றும் என் மனைவியிடஞ் சொல்லியனுப்பினர். எனக்குத் திங்கடோறும் 200 அல்லது 300 ரூபா வருமானம் இருந்தால் இங்கு எப்படிக் காலங் கழித்துக் கொடுத்தாலுங் குற்றமில்லை. எனக்கு இப்போதுள்ள வட்டி வரும்படி யெல்லாம் நாற்பது ரூபாய்தான். சென்ற ஓராண்டிற்குள் இரண்டாயிர ரூபா முதலிலிருந்தெடுத்துச் செலவு செய்ய நேரிட்டமையால் பன்னிரண்டரை ரூபா வட்டி குறைந்துவிட்டது. நூற்பதிப்புச் செலவுக்கும் அறமன்றச் செலவுக்கும் யான் படும்பாடு இறைவனே அறிவான். என் ஒருவனது முயற்சி ஓய்ந்தால் ஒரு காசு கூட வருதற்கு வேறு வழியில்லை. இந்நிலையில் ஒரு திங்கள் முடிந்து இவர் கணக்குப் பார்த்துக் கொடுக்கும் வரையில் யான் காத்திருக்க இயலாது. திருநாவுக்கும் மூன் நகரிக்குமட்டும் ஒரு திங்கட் செலவு ரூபா முப்பது. ஆதலால் நாளையோடு என் கணக்கு முற்றும் பார்த்து எனக்குச் சேரவேண்டிய தொகையையும் என் புத்தகங்களையும் என்னிடஞ் சேர்ப்பிக்கும்படி உடனே அவர்க் கெழுதுங்கள். முன்போல் அவ்வப்போது வேண்டும் புத்தகங்களைக் கொடுத்துப் பணம் பெறுவதுதான் தொல்லையில்லாதது.

எனது ஞான சாகரத்தை விலையின்றிக் கழகத்திற்கு அனுப்பியும், நீலாவின் தனித்தமிழ்க் கட்டுரைகளை மிகக் குறைந்த விலைக்குக் கொடுத்தும், என் புத்தக விற்பனைக்காக 12½% கழிவு கொடுத்தும், யான் கைம்மாறு கருதாது பல செயற்கரிய உதவிகளை யெல்லாம் நீளச் செய்து

வரவும், என் புத்தகங்களையே மிகுதியாய் வைத்துக் கொண்டும், இடையிடையே என் சிறு செலவுகளுக்குப் பணந்தர ஒருப்படாத நெஞ்சத்தின் கடுமையை என்னென்பேன். இப்பாழுந் தமிழ் நாட்டுக்குச் செய்யும் அருந் தொண்டு விழலுக் கிறைத்த நீராயிற்றே! இறைவனே எம்மைக் காக்கற்பாலன்.

இங்ஙனம்,

(ஒப்பம்) சுவாமி வேதாசலம்.

குறிப்பு: அடிகளார் தாமே நூல்களை வாங்குவதும், படிப்பதும், பேணிக் காப்பதும், நூல் எழுதுவதும், அச்சிடுவதும், விற்றுவருவதும், கைப்படவே கடிதம் எழுதுவதும், வீட்டுக் கணக்கு எழுதுவதும், சொற்பொழிவாற்றச் செல்வதும், மாணவர்கட்குப் பாடஞ் சொல்வதும் ஆகிய அனைத்தையும் தாம் ஒருவரே செய்து வந்தமையினை விளக்கிச் செல்வி 50 பரல் 10 இல் "மறைமலையடிகள் தமிழ்ப் பேரறிஞர் மட்டுமல்லர், பலதுறைப் பெரு நிறுவனமாக விளங்குபவர்" என்ற தலைப்பில் எழுதப் பெற்றுள்ளது. 2—9—1927 இல் என் தமையனார் திருவரங்கனார் அவர்கள் அடிகளாரின் திருமகளார் தனித்தமிழ்த் திருவாட்டி நீலாம்பிகையம்மையாரை மணந்து பாளையங் கோட்டையில் வாழ்ந்து வந்தனர். கழகத் தொடக்க காலத்தில் பங்குகள் சேர்ப்பதற்கு அலைந்து திரிந்து பணம் பெற்று இடர்ப்பாட்டோடு திட்டமிட்டு நூல்களை அச்சிட்டும் விற்றும் வரவேண்டியதாயிற்று. எனவே அடிகளாரிடம் வாங்கிவந்த நூல்கட்குப் பணம் கொடுப்பதற்கியலவில்லை. மேலும் நூல்களை வாங்கி வந்த அடுத்த கிழமையே பகுதிப்பணம் கேட்கப் பெற்றது. ஆனால் சொல்லிவர்தபடி கொடுப்பதில் பின்னிற்கவில்லை. அடிகள் மேலே எழுதிய கடிதத்திற்காக யானோ என் தமையனாரவர்களோ வருந்தவில்லை.

அடிகள் மறைவுக்குமுன் என்மீது முழு நம்பிக்கை வைத்தே விருப்ப ஆவணம் எழுதினர். அவர்கள் விரும்பியபடி அடிகளார் மாளிகை கலைமன்றமாக மிளிர்வதும், அடிகளார் நூல்கள் திரும்பத் திரும்ப அச்சிடப் பெறுவதும், அடிகளார் தொகுத்த நுல்கள் நூல் நிலையமாக இயங்குவதும் ஆகியவற்றை ஆவியுலகில் அம்மை அம்பலவாணர் கழலடியில் அமர்ந்து அறிந்து இன்புறுகின்றனர். ஆவியுலகுத் தொடர்பாளர் திரு. இரா. ந. குற்றாலலிங்கம்பிள்ளை வழி அனுப்பிய செய்திகள் முன்பு செல்வியில் வெளியிடப் பெற்றுள்ளன. ஒரு முறை தமியேனைப்பற்றித் தொடர்பாளர் வழிப்புகழ்ந்து கூறியது: "அப்போதே உம்முடைய நேர்மை, உண்மை, செயல்திறமை, கண்டிப்பு ஆகியவற்றை நன்கறிவேம்".

வ. சு.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் ௩௬௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழக ஆட்சியாளர்		
பிப்ரவரி, மார்ச்சுத் திங்கள் நன்கொடை	ரூ. 200	00
ஆட்சியாளர் மனைவி மங்கையர்க்கரசி பிறந்த நாள்	5	00
நூலகர் மனைவி, மக்கள் இருவர் பிறந்த நாள்	15	00
செயற்குழு உறுப்பினர்கள் :		
திரு. க. வ. முத்தையா பிள்ளை அவர்கள்	25	00
திரு. நெ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்	25	00
திரு. இரா. சுந்தரம் பிள்ளை அவர்கள்	25	00
திரு. திருமலை (ஐ. ஓ. பி.) கோவை	11	00
திரு. தி. து. சுப்பிரமணிய பிள்ளை, நெல்லை மகளார் திருமண நன்கொடை	10	00
திரு. சண்முகநாத பிள்ளை, கிரவுண் பேக்கரி, மதுரை	25	00
பாபநாசம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள்	4	05
சா. நாகராசன், திருச்சி (திருச்சிக் கிளை வழி)	5	00
சி. முத்தையா, அரியமங்கலம் (திருச்சிக் கிளை வழி)	5	00
எஸ். முருகன், தமிழ்ப் பேராசிரியர், அரசு கல்லூரி, சித்தூர், பாலக்காடு (கோவைக் கிளை)	11	00
திரு. சோமசுந்தரம், திருப்பரங்குன்றம் (மதுரைக் கிளை வழி)	8	00

வேண்டுகோள் : இம் முறையில் தமிழ்ப் புலவர்களும், பேராசிரியர்களும், அன்பர்களும் நன்கொடை வழங்கிப் புகழ்பெறுவார்களாக !

அருட்டிரு அழகரடிகள் திருக்குறட் சொற்பொழிவு

சென்னைப் பல்கலைக் கழகத்தில் திருமதி சொர்ணம்பாள் நினைவு அறக்கட்டளையின் சார்பில், முறையே 4, 5—4—77 ஆம் நாள்களில், மாம்பாக்கம் குருகுலம் திருக்குறள் பீடம் தவத்திரு அழகரடிகள் ‘திருக்குறள் வாழ்க்கை’ ‘திருக்குறள் உள்ளுணர்வு’ என்னும் பொருள்கள் பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

பாராட்டுரை

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் நடத்துகின்ற மறைத்திரு மறைமலையடிகளின் நூல்நிலையத்தைக் கண்ணுறும்போது இன்று கிடைக்கப்பெற்றுக் களிபேருவகை யெய்துகின்றேன். இன்று என் வாழ்வின் பொன்னாளாகக் கருதுகிறேன். அடிகளாருடைய அறிவுத் திறனை எண்ணி எண்ணி வியக்கின்றேன். இவ் வரும்பெரும் நூல்களைப் பொன்னே போன்று போற்றிப் பாதுகாத்து வரும் நூல்நிலையத்தார்க்குத் தமிழ்மக்கள் என்றென்றும் கடப்பாடுடையவர்கள்.

டாக்டர் மெ. செ. இராசமாணிக்கம், எம். எஸ்.
எலும்பு மருத்துவர்.
சென்னை, பொது மருத்துவமனை.

18—6—76.

செய்திகளும் குறிப்புகளும்

அம்மை அம்பலவாணர்க்கு அமெரிக்காவில் திருக்கோயில்

ஏறக்குறைய 4000 வெண்பொற் காசுகள் மதிப்புடைய ஐம்பொன்னுல் ஆக்கப்பட்ட நடராசர், சிவகாமி அம்மை, மாணிக்கவாசகர் ஆகிய இம் மூவரின் திருவுருவச் சிலைகள், அமெரிக்காவுக்கு அனுப்பப்படவிருக்கின்றன. நியூயார்க் நகரில் புதிதாக ஓர் இந்துக் கோயில் கட்டப்பட்டுள்ளது. அக் கோவிலில் வைப்பதற்காக, இராமநாதபுர மாவட்டத்திலுள்ள கோயிலூர் மடத்தார் இச் சிலைகளைக் கொடையாக வழங்கியுள்ளனர். சென்ற திங்கள் துவக்கத்தில் சிதம்பரம் நடராசர் கோயிலில் இச் சிலைகள் சிறப்பாகத் திருமுழுக் காட்டப்பட்டு அர்ச்சனைகளும் செய்யப்பட்டன.

திருக்கழுக்குன்றத்தில் கண்ணப்பர் வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள்

திருக்கழுக்குன்றம் தமிழக மலைக் கோயில்களுள் புகழ்பெற்றதொரு கோயிலாகும். மலைமேல் வேதகிரீசுவரர் திருக்கோயிலும், மலையடிவாரத்தில் பக்தவத்சலனுர் கோயிலும் அமைந்துள்ளன. இந்த பக்தவத்சலனுர் கோயில் மேல் தளத்தைச் சார்ந்துள்ள சுவரில் பழங்காலச் சிற்பங்கள் சில காணப்படுகின்றன. அவை பூதகணங்கள் எனப்படுகின்றன. இந்தப் பூதகணங்களுக்கிடையே சிறந்த சிவ பக்தராகிய கண்ணப்பரின் சிலை தெளிவாகக் காணப்படுகின்றது. கண்ணப்பர் சிவலிங்கத்தின் முன் மண்டியிட்ட வண்ணம், வலக்கையில் ஓர் அம்பு வலக்கண்ணைப் பெயர்த் தெடுக்கச் சித்தமாயிருப்பது போல் அமைந்துள்ளது.

திருக்கழுக்குன்றத்தில் காணப்படும் இச் சிற்பங்கள் ஒன்பதாவது நூற்றுண்டைச் சேர்ந்தவை எனத் தெரிய வருகிறது. வரிசையாகக் காணப்படும் இச் சிற்பங்கள் கண்ணப்பர் வரலாற்றைக் கூறுவதுபோல் அமைந்துள்ளன. வேடனுகிய கண்ணப்பர் பன்றியைச் சுமந்து வருதல்-சிவலிங்கத்தின் முன் தம் கண்ணைப் பறித்தெடுத்தல் - வைதிகரான கோயிற் குருக்கள் வழிபாட்டிற்கு மலர் எடுத்து வருதல் போன்ற சிற்பக் காட்சிகள் காணப்படுகின்றன.

திப்பு சுல்தான் காலத்துப் புதையல்

ஈரோட்டுக்கு 18 கி. மீ. தொலைவில் உள்ள காங்கேயம் பாளையம் என்னும் ஒரு சிற்றூரில் செங்கற் சூளைக்காக மண்ணை வெட்டிக் கொண்டிருந்தான் ஒரு கூலி ஆள். அப்பொழுது அவனது கடப்பாறை ஒரு மட்பாண்டத்தின்மீது மோத அப் பாண்டம் உடைந்தது. அந்த மட்பாண்டத்திற்குள் மற்றெரு சிறிய பாண்டம் காணப்பட்டது. பெரிய பாண்டத்துள் 170 வெண்பொற் காசுகளும், சிறிய பாண்டத்துள் 290 பொற்காசுகளும் காணப்பட்டன. இந்த நாணயங்களின் இருபக்கத்திலும் உருது எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. இச் செய்தி அரசினர்க்குத் தெரிந்து மாவட்ட ஆட்சியாளர்கள் வந்து பார்வையிட்டுப் பின்னர் இப் புதையல்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்க்கு அறிவிக்கப்பட்டது. இந்த நாணயங்கள் திப்பு சுல்தான் காலத்து நாணயங்களாக இருக்கலாமெனக் கருதப்படுகின்றன. வெள்ளி நாணயங்கள் இப்போது புழக்கத்திலிருக்கும் 50 காசுகளின் அளவிலும், பொன் நாணயங்கள் 1 செ. மீ. குறுக்களவு உள்ளனவாகவும் இருக்கின்றன.

நாட்டுப்புற இயல் கருத்தரங்கு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் 26, 27-3-77 ஆம் நாள்களில் சென்னை மத்திய நூலகக் கட்டட சண்முகம் கலையரங்கில் முறையே பேராசிரியர் மு. அருணாசலம், டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் நாட்டுப்புற இயல் கருத்தரங்குகள் நடைபெற்றன. திருவாளர்கள் நா. வானமாமலை, டாக்டர் வ. சுப. மாணிக்கம் மற்றும் பேராசிரியர்கள் பலர், கவிஞர்கள் ஆகியோர் பல்வேறு மாவட்டங்களில் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

பதினேழாவது புலவர் திருநாள்

டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள் தம் அன்னையார் பெயரால் நிறுவிய சொர்ணம்பாள் அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு, கடந்த பிப்பிரவரித் திங்கள் 28 ஆம் நாள் துவங்கி மார்ச்சு 1, 2 ஆம் நாள் முடிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. சந்திரசேகர் அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துச் சொற்பொழிவாற்றினர். டாக்டர் வ. சுப மாணிக்கம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினர். பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் 'திருக்தக்கதேவர்' என்னும் தலைப்பில் முறையே 'காப்பிய அமைப்பு', காப்பிய அழகு' 'காப்பியப் பெருமை' என்னும் பொருள்கள் பற்றி அரிய உரையாற்றினார்.

சோழர் காலத்தில் நாட்டப்பட்ட அடிக் கற்கள்

கி. பி. 13, 14 ஆம் நூற்றுண்டுக்குரிய 21 செ. மீ. நீளம், 11 செ. மீ. அகலம், 5·5 செ. மீ. பருமன் கொண்ட நான்கு கருங்கற்கள் புதுச்சேரிககு அண்மையில் உள்ள உலகபுரம் சிவன் கோயில் மண்டபத்தின் நுழைவாயிலின் கீழ் நிலத்தில் புதைந்திருந்தமை அண்மையில் தமிழகப் புதை பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கற்கள் சதுர வடிவில், நடுவே குழிந்தும், அக் குழியில் விலையுயர்ந்த மணிக்கற்கள் வைத்து மூடப்பட்டும் இருந்தனவாம். இந்த நான்கு கற்களும் நான்கு !வேதங்களாகக் கருதப்பட்டு அடிக்கற்களாக நாட்டப்பட்டு அவற்றின்மீது கட்டடங்கள் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

உலகபுரம் முதலாவது ராசராச சோழன் காலத்தில் ஒரு சிறந்த வணிகத் தலமாக விளங்கியிருந்ததாகவும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

திரைப்பட இயக்குநர் திரு. ஏ. பி. நாகராசன் மறைவு

புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகரும், இயக்குநரும், தமிழ் மொழி, கலைகளில் ஆர்வமுள்ளவரும் புராண, இதிகாசப் படங்களைப் புதிய முறையில் தயாரிக்கும் திறமையாளருமான திரு. ஏ. பி. நாகராசன் அவர்கள் கடந்த 1—4—77 நள்ளிரவில் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம்.

இவர் நம் கழக ஆட்சியாளரிடமும் கழகத்திடமும் பற்றுள்ளவர். கழக நூல்களை வாங்கிப் படித்திருக்கிறார். ஒரு முறை ஆட்சியாளரிடம் தாம் தொகுத்துள்ள நூல்களிற் கழக வெளியீடுகள் பல இருப்பதைக் காட்டினராம்.

மறைந்த திரு. நாகராசன் அவர்களின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மதிப்புரை

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்—மூலமும் உரையும்

[உரையாசிரியர்: இராவ்சாயிப் நல். முருகேச முதலியார், பி. ஏ. வெளியீடு: திருவண்ணாமலை திருத்துறையூர் திருமுதுகுன்றம் வீர சைவ ஆதீனம், ஸ்ரீ குமாரதேவர் மடம், விருத்தாசலம். விலை: ரூ. 2-50]

கந்தப்ப முனிவர் அருளிய சந்நிதி முறையில் அடங்கிய இத் திருத்தணிகைப் பிள்ளைத்தமிழுக்கு இராவ்சாயிப் நல். முருகேச முதலியாரவர்கள் குறிப்புரையும், தேவையான இடங்களில் விளக்கமும் வரைந்துள்ளனர். இந் நூல் திருவண்ணாமலை ஆதீனம் திருப்பெருந்திரு சுப்பிரமணிய சிவப்பிரகாச சுவாமிகளின் நான்காவது குருபூசை வெளியீடாக வெளிவந்துள்ளது. தவத்திரு அழகரடிகளின் அணிந்துரை நூலினை அணி செய்கின்றது. சிறந்த ஆராய்ச்சி முன்னுரையுடன் கூடிய பயனுள்ள நூல், அன்பர்கள் படித்து மகிழ்தற்குரிய சிறந்த வழிபாட்டு நூலாகவும், நல்லதோர் இலக்கியமாகவும் திகழ்கின்றது.

பூத்த வெள்ளி—கவிதைகள்

[ஆசிரியர்: குருவிக் கரம்பை சண்முகம், எம். ஏ., எம். லிட். பாண்டியன் பதிப்பகம், சென்னை-600030. விலை: ரூ. 3-00].

இஃதொரு கவிதைத் தொகுப்பு நூல். இயற்கைக் காட்சிகள், காதல், சமுதாய அமைப்பு இன்னபிற கருத்துகள் அடங்கிய புதுமைக் கவிகள் அடங்கியுள்ளன. 'புகாரில் ஒருநாள்' என்னும் கவிதை சிறப்பாக அமைந்துள்ளது.

அலைகள்

[ஆசிரியர்: சிங்கை மா. இளங்கண்ணன், பாரிநிலையம். விலை: ரூ. 7-00].

இது சிங்கப்பூர் 'தமிழ் முரசு' இதழில் வந்த நெடுங்கதை. காதலின் சிறப்பு, அதற்கு நேரும் இடையூறுகள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் கதை. சிங்கப்பூரின் நாகரிகம், பண்பாடு இன்னபிற செய்திகள் கதையின் ஊடே பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. கதை இனிய எளிய தமிழில் அமைந்துள்ளது.

ஓ...அன்றில் பறவைகளே

[ஆசிரியர்: இல. செ. கந்தசாமி, தமிழ்த்துறை, வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்-3. கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்., 1/140, பிரகாசம் சாலை, சென்னை-1. விலை: ரூ. 5-00].

சிறந்த தமிழறிஞராகிய இந் நூலாசிரியர் நற்றிணைப் பாடலில் வரும் அன்றில் பற்றியதொரு குறிப்பினைக் கருவூலமாகக் கொண்டு இப் புதினத்தை இயற்றியுள்ளார். வேள், தங்கம், சேகர் என்னும் கதை உறுப்பினர் பேசுவது போலவே கதைப்போக்கு அமைந்துள்ளது. சிறந்த தமிழ் நடையில் அமைந்துள்ள இப் புதினம் அனைவரும் படித்து மகிழ்தற்குரியது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

திருக்குறள் தாலாட்டு

ஆசிரியர் : மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை

தாய்மார் வளர்க்கும் தமிழாகிய தாலாட்டு, குழந்தைகட்குச் செவிக்கின்பமும் பெரியவர்கட்குக் கருத்துக்கு இன்பமும் நல்கும் ஆற்றல் வாய்ந்தது. அத்தகைய தாலாட்டின் வாயிலாகத் திருக்குறள் கருத்துகளைப் பரப்பும் நோக்கத்துடன் இத் திருக்குறள் தாலாட்டு வெளியிடப்பட்டுள்ளது. தாலாட்டின் மூலம் திருக்குறட் கருத்துகள் சுருங்கச் சொல்லி விளங்க வைகப்படுகின்றன. இல்லங்கள் தோறும் இருக்க வேண்டிய புத்தகம். ரூ. 0 80

திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா

(உரை நடையும் குறிப்பும்)

உரையாசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா முருக அன்பர்கள் ஓதி மகிழ்தற்குரிய அரிய வழிபாட்டுப் பாடல்களைக் கொண்டது. இதற்குச் சிறந்த உரைநடையும் குறிப்புரையும் சேர்க்கப்பட்டிருப்பதால் பொருள் தெரிந்து ஓதுதற்கு ஏற்ற அரிய நூலாகத் திகழ்கிறது. ரூ. 1 25

திருமுருகாற்றுப்படை—உரைநடையும் குறிப்பும்

ஆசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை சிறந்த சங்க இலக்கியமாகவும், சமய இலக்கியமாகவும் திகழ்கிறது. இதற்குப் புதிய முறையில் உரைநடையும், குறிப்புரையும் எழுதியுள்ளார் இவ்வுரையாசிரியர். ரூ. 1 50

கந்தர் சட்டி கவசம்—குறிப்புரையுடன்

முருகன் அருள் பெற விரும்புவோர் அன்றுடம் ஓதத்தக்க கந்தர் சட்டி கவசத்திற்குச் சிறந்த குறிப்புரை சேர்க்கப்பட்டுள்ளது. அன்பர்கட்கு இது பெரிதும் பயன்படும் ரூ. 0 60

ஆறுபடை வீடுகள் கந்தர் சட்டி கவசம்

'கந்தர் சட்டி கவசம்' என்பது முருகப் பெருமான் எழுந்தருளிய ஆறுபடைவீடுகளுள் திருச்செந்தூர் ஒன்றினைப் பற்றி மட்டுமே வழங்கி வந்த வழிபாட்டு நூலாகும். ஆனல் இந்நூலாசிரியர் ஆறுபடை வீடுகட்கும் கந்தர் சட்டி கவசம் அருளியுள்ளமை பலருக்குத் தெரியாது. எனவே இவ் வெளியீட்டின் மூலம் ஆறுபடை வீடுகளின் மாண்பும் கூறப்படுகிறது. முருக அன்பர்கள் ஓதி வழிபடுதற்குரிய நூல். ரூ. 1 25

மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி

ஆசிரியர் : சிவத்திரு. அழகரடிகள்.

மறைத்திரு மறைமலையடிகளாரின் மாணவராகிய அழகரடிகள் எழுதியுள்ள இவ் வரலாற்று நூல் மறைமலையடிகளாரின் பல்துறை அறிவாற்றல்களையும், பேச்சுத்திறன்—ஆராய்ச்சித்திறன்—அவர்தம் உளப்பாங்கு இன்னபிறவற்றையும் செம்மையாக எடுத்துக்காட்டுகிறது. ரூ. 10 00

பதிவு எண் : M. 4899

அப்பர் அச்சகம், சென்னை-1.